1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

*Telegrams:*
"CATHOLIC PRESS"
JAFFNA.

*Telephone:*
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 22-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## சமுசாரிகளான அர்ச். பெண்மணிகள்

உலகில் இல்லறவாசிகளாய் விளங்கியிருந்தவர்களிலே திருச்சபையால் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்ற பெண்மணிகள் எத்தனைபேர்? என்ற வினு பத்திரிகையொன்றில் எழுந்து. அதற்குப் பலரும் அளித்த பதில்களைக்கொண்டு வெளிவந்துள்ள இருபது பெண்மணிகளின் நாமங்கள் வருமாறு:

அர்ச். அன்னம்மாள் — தேவதாயாரின் திருத்தாயும், அர்ச். ஜுவக்கீம் முனீந்திரரின் திருப்பத்தினியும்.

அர்ச். கேன்ரிஜேர்ஹு — லீன்ஸ்றர் இளவரசர் ஒருவரின் குமாரத்தியும், மடாதிபரான அர்ச். பெலானின் தாயும்.

அர்ச். மோனிக்கம்மாள் — ஹொப்போவின் மேற்றிராணியாரும், திருச்சபையின் வேதபாரகருமான அர்ச். அகுஸ்தீனுருடையவும், மற்றும் இரு பிள்ளைகளுடையவும் தாய்.

அர்ச். ஹியூமிலித்தாஸ் — இருபுதல்வர்களின் தாயான இவள் தனது வாணளின் பிற்பட்ட காலத்திலே ஓர் கன்னிகாமடத்தின் தலைவியாயிருந்தாள்.

அர்ச். றடேகுந்தே அம்மாள்— குளோத்தாய்றே மன்னரின் பத்தினி.

அர்ச். எலேனம்மாள் — கொன்ஸ்தந்தியூஸ் குளோறஸ் எனும் ரோமானிய ஜெனறலின் பத்தினியும், பெரிய கொன்ஸ்தந்தீன் சக்கிரவர்த்தியின் தாயும்

அர்ச். ஜேன் பிரான்சேஸ் தே சாந்தல் அம்மாள் — எழுபிள்ளைகளின் தாயான இவள் அர்ச். பிரான்சிஸ் சலேசியாரின் தலைமையில் மினவுதல் கன்னிகாசபையை அடியிட்டாள்.

அர்ச். குளோற்றில் தே — மூன்றுபுத்திரிகளுக்கும், ஒரு புத்திரனுக்கும் தாயான இவள் சாலியன் பிறுங்கர்களின் அரசரான குளோவிஸ் மன்னரின் பத்தினி.

அர்ச். மார்கறேற் அம்மாள்—ஸ்கொட்லாந்தின் அரசியான இவள் ஆறுபுதல்வருக்கும், இருபுதல்விகளுக்கும் தாய்.

அர்ச். (ஹங்கேரிதேசத்து) எலிசபேத்அம்மாள்—துரிஞ்சியாநாட்டு லான்ட்கிறேவ் அரசரின் பத்தினியான இவள் மூன்றுபிள்ளைகளுக்குந் தாயாவள்.

அர்ச். பிரான்சேஸ் அம்மாள் (ரோமை நகரின்) — இவள் அநேக பிள்ளைகளுக்குத் தாய்.

அர்ச். எலிசபேத் (அல்லது இசபேல்) — போர்த்துக்காலின் அரசியும், ஓர் குமாரனுக்கும், ஓர் குமாரத்திக்கும் தாயுமாவள்.

அர்ச். கந்தறீன் அம்மாள் (ஜெனோவா நகரின்)

அர்ச். எதேல் பேர்க்கா — மேற்குச் சாய்க்சனியர்களின் அரசரான இனுவின் தேவியாவள்.

அர்ச். விறிசித்தம்மாள் (சுவீடனின்) — எட்டுப்பிள்ளைகளுக்குத் தாயான இவள் விறிசித்தினிய கன்னிகாசபையை அடியிட்டவள்.

அர்ச். ஹெட்விக்அம்மாள் (போலாந்தின்) — இவள் எழுபிள்ளைகளுக்குத் தாயாயிருந்தாள்.

அர்ச். றீத்தம்மாள் — இருபிள்ளைகளுககுத் தாய்.

அர்ச். எமேலியா — அர்ச். பசிலின் தாய்.

அர்ச். சில்வியா — அர்ச். பெரியகிறகோரியாரின் தாய்.

அர்ச். பவுலா — ஐந்து பிள்ளைகளுக்குத் தாய். இவர்களில் இருவர் அர்ச்சியசிஷ்டர்கள்— அர்ச். பிளேயெசில்லாவும், அர்ச். யுஸ்தோசியுமியும்.

---

இஸ்பிரீ. ஆக. பின்வரும்

### 4-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(லூக். 5: 1—11)

அக்காலத்தில் சனங்கள் சர்வேசுரனுடைய வாக்கியத்தைக் கேட்பதற்கு யேசுநாதரிடத்தில் நெருங்கி வந்தபோது, அவர் ஜெனசரேத் என்னும் ஏரியின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது ஏரிக்கரையோரத்தில் இருந்த இரண்டு தோணிகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்களோ அவைகளினின்று இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். ஆனல், அவைகளில் ஒன்ருகிய சீமோனுடைய தோணியில் அ[illegible] குச் [illegible]

அவரைக் கேட்டுக்கொண்டார். பின்பு அவர் உட்கார்ந்து தோணியிலிருந்து சனங்களுக்குப் போதித்தார். அவர் போதித்துமுடிந்தபின், சீமோனைநோக்கி: தோணியை ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோ; மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள் என்ருர். சீமோன் அவருக்கு மறுமொழியாக: போதகரே, இரவெல்லாம் நாங்கள் பிரயாசப்பட்டும், ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும், உமது வார்த்தையின்படியே வலையை வீசுவேன் என்ருர். அப்படியே அவர்கள் செய்தபோது ஏராளமான மச்சங்களை வளைத்துப்பிடித்தார்கள். அவர்களுடைய வலையோ அறுந்துபோகிறதாயிருந்தது. அப்போது தங்களுக்கு உதவிசெய்ய வரும்பொருட்டு வேறு தோணியில் இருந்த கூட்டாளிகளுக்குச் சயிக்கினைகாட்டினர்கள். அவர்களும் வந்து இரண்டு படகுகளையும் நிரப்பவே, இரண்டும் அமிழ்ந்துபோகிற தருவாயிலிருந்தன. இதைக்கண்டு சீமோன் இராயப்பர் யேசுநாதருடைய பாதங்களில் வீழ்ந்து: ஆண்டவரே, நான் பாவியான மனிதன். ஆகையால் என்னைவிட்டகன்றுபோம் என்ருர். ஏனெனில், அவரும் அவரோடு இருந்த சகலரும் தாங்கள் பிடித்த மீன்கள்திரளின்நிமித்தம் மிகுந்த பிரமிப்பு அடைந்திருந்தார்கள். சீமோனுடைய கூட்டாளிகளாயிருந்த செபதேயின் குமாரராகிய யாகப்பரும் அருளப்பரும் அவ்விதமே பிரமித்துக்கொண்டிருந்தார்கள். யேசுநாதர் சீமோனைநோக்கி: நீ பயப்படவேண்டாம்; இதுமுதல் மனிதரைப் பிடிக்கிறவனுயிருப்பாய் என்ருர். அவர்கள் தோணிகளைக் கரையிற் சேர்த்தபின் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்சென்ருர்கள்.

[illegible]துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

## தயாளமும் — சிநேகமும்

கிறீஸ்துநாதர் கலிலேயா, சமாரியா, யூதேயா நாடுகளில் அலைந்துதிரிந்து ஆத்துமாக்களை ஈடேற்றி எங்கும் எவர்க்கும் நன்மையேசெய்து சுகமளிப்பதை நோக்குவோம். உண்மையான உயரிய அன்பானது பரந்துவிரிந்து பிறர்நன்மையே தேடுகிறது. இவ்வரிய குணம் நன்மனத்தின் நற்குறியாகும். அணைகடந்த அன்புகொண்ட யேசுவின் திருஇருதயம் அனைவரையும் நேசித்து அவர்கள்பால் தயாளமும் இரக்கமுங் கொண்டு அரவணைக்கிறது.

சுவிசேஷமானது யேசுவின் அளவற்ற அன்பையும், இணையற்ற இரக்கத்தையும் துள்ளிதமாய் எடுத்துக்காட்டும் உண்மைச் சரித்திரம். அவர் மக்களுக்கு எடுத்துரைத்த "நல்ல ஆயன், நல்லசமாரித்தன், ஊதாரிப்பிள்ளை" முதலிய உவமைகள் அவர் அன்பின் எடுத்துக்காட்டுகள். இவ்வுலகவாழ்வின் துன்பதுயரக் கணைகளால் குத்துண்டு காயப்பட்டு மனம் வாடும் மக்களும், பாவச்சகதியிலுழன்று பாக்கியமின்றிப் பதைபதைத்து வாடியபாவிகளும் அவர் இருதயத்தில் தனியிடம் பெற்றிருந்தனர். குஷ்டரோகிகள், திமிர்வாதக்காரர்கள், குருடு, செவிடு, ஊமை, பேய்பிடித்தோர் முதலிய நோயாளிகள் அற்புதவிதமாய் அவர் கையிலிருந்து சுகம்பெற்றனர். பாவிகளான மரியமதலேனுள், இராயப்பர், தோமையார், சமாரியப்பெண், விபசாரத்தில் பிடிபட்டபெண் முதலியோர் குற்றமுணர்ந்து கண்கசிந்து மனமுருகியதால் கருணைநிறைந்த தேவனிடமிருந்து இரக்கமும், அரவணைப்பும், பாவமன்னிப்பும் பெற்றுப் புனிதமடைந்தனர். "அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன, ஏனெனில், அவள் மிகநேசித்தாள்." அவர் பாவத்தை வெட்டெனவெறுத்தார். ஆனல், பாவியைநேசித்து அவன் மனம்மாறப் பரிவுடன் தேடினர். அவனுக்கு அருளைக்கொடுத்து அன்பையூட்டி அறவாணுக்கினர் கிறீஸ்துநாதர்.

நற்கருணையில் பிரசன்னமாயிருந்து மக்களின் வருகைக்காகக் காத்திருக்கும் தேவனின் அன்புக்கும், தயாளத்திற்கும் அளவுண்டோ? மனமுடைந்த பாவியை மன்னிக்கக் குருமாருக்கு அதிகாரமளித்த ஆண்டவனின் அன்புதானென்னே! வானுலகில் சர்வவல்லமையுடன் வீற்றிருக்கும் போது மனுமக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### படுக்கையாக ஆறுமாதம்

இங்கிலாந்தில் சறேமாகாணத்தைச்சேர்ந்த மொடென்நகரில் ஆறுமாதகாலம் பாயும்படுக்கையுமாய்க் கிடந்த ஸ்ரீமதி கத்லீன் ஹில்கட் எனும்மாது சமீபத்தில்நடந்தேறிய ஆங்கில தேசிய யாத்திரையிற்சேர்ந்து தூக்கிச்செல்லும் கட்டிலிலே லூர்துபதிக்குச் சென்றாள். அங்கு செல்லும்போது இடைவழியிலே அவள் நிலைமை பெரிதும்ஆபத்துக்கேதுவாய் இருந்தமையால் அவஸ்தைப்பூசுதல் செய்யப்பட்டாள். ஆயின், யாத்திரையால் திரும்பும்போது எவருமே பிரமிக்கும்படியாக அவள் நடந்துசென்றாள். அடுத்தஞாயிற்றுக்கிழமை தனது விசாரணைப்பங்குக் கோவிலாகிய குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாள் கோவிலில் நிறைவேறிய தேவதோத்திர பூசைக்கும் நடந்து சென்றாள். அநேகவருடகாலம் இவள் ஓர் நோயாளியாய் இருந்துவந்தாள். லூர்துபதி அற்புதசலத்தில் நீராடியதும் திடீரென இவள் நிலைமை மிக மோசமாயிற்று. ஆயின் பிற்பாடு தான் குணமடைந்திருப்பதாக உணர்ந்தாள். எழுந்து நடந்தாள். இவள் கணவர் ஓர் புரொட்டஸ்தாந்தர்.

### ஆபிரிக்க குருமாணவர்கள்

ஆபிரிக்காக் கண்டத்தின் சகலநாடுகளையுஞ் சேர்ந்தவர்களாய்த் தற்போது றோமாபுரியிலே 59 குருத்துவமாணவர்கள் வேதசாஸ்திரம் கற்றுவருகிறார்கள். இவர்களில் தென்னாபிரிக்கர் பன்னிருவர். எத்தியோப்பியர்பதின்மர். எரித்ரியர் நால்வர். தங்கனைக்கர் நால்வர். உகண்டாவர் ஐவர். நைஜீரியர் மூவர். கமறூனியர் நால்வர். ஏனையோரெல்லாம் மற்றும் பதினெருநாடுகளைச் சேர்ந்தவர்கள். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பன்னிருவர்நீங்கலாக ஏனையோரெல்லாம் காப்பிரிகளே. இவர்கள் அந்நகரிலுள்ள எத்தியோப்பியகல்லூரி, விசுவாசப் பரப்புதற்கல்லூரி முதலாம் பத்துக் கல்லூரிகளில்வதிந்து, அங்குள்ள பல்வேறு சர்வகலாசாலைகளிலும் பயின்றுவருகிறார்கள். 14 பேர் தத்துவசாஸ்திர மாணவர்கள். 35 பேர் வேதசாஸ்திர மாணவர்கள்.

### பாத்திமாநாயகியின் அருள்

இந்தியா, இலங்கை, மலாய் நாடு ஆதியவற்றிலே "யாத்திரைக்கன்னிகை"யாக விஜயஞ்செய்தருளிய பாத்திமாஅன்னையின் திருச்சுரூபம் தற்போது ஆஸ்திரேலியாவிலே சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகின்றது. அங்கே வக்கா–வக்கா நாடுகளுக்குச் சமீபமாய் அது தங்கியிருந்தபோது, லொக்காட் எனுமிடத்தைச்சேர்ந்த ஓர் கமக்காரனின் மகளும், சென்ற ஐப்பசி முதல் 'போலியோ' எனப்படும் குழந்தைப்பிள்ளை வாதங்கண்டு வருந்தியவளுமான 21 வயசுடைய ஜோன் வெஸ்ற் பிளேட் எனும் பெண்மணி அதனைத்தரிசிக்குமாறு கொண்டுசெல்லப்பட்டுச் சுரூபத்தின்முன் செபஞ்செய்துகொண்டிருக்கையில் தனது வலப்புறத்திலே பாரிசவாதங் கண்டிருந்த தசைநரம்புகள் அசைவதாக உணர்ந்தாள். அதன்மேல் ஓர்விதமனவெழுச்சி அவளுக்குண்டாயிற்று. சில மணி நேரத்தின்பின் தனது சகோதரியின் வீட்டிலே ஓர் சாலையில் அவள் படுத்திருக்கும்போது தன்னுடைய தசைநரம்புகள் இழுபடுவதாகவும், இறுகுவதாகவும், பலமடைவதாகவும் உணர்ந்ததும் தனதுபாத இரும்புக்கவசங்களை அகற்றிவிட்டு எழுந்தாள். எழுந்து தனது சகோதரிகள் இருவரும் நீராடிக்கொண்டிருந்த இடஞ்செல்லவே, மூவரும் ஆனந்தக்கூச்சலிட்டார்கள். அதன்மேல் அவள் ஓர் சைக்கிளிலே வக்கா–வக்கா நகரின் ஹென்ஸ்ச்கி மேற்றிராணியாரது மாளிகை சென்றாள். அன்றுமுதல் அவள் முன்போலக் குதிரைகளில் ஏறிச்சென்றும், கமத்தில் வேலைசெய்தும் வருகின்றாள்.

### இரும்புத்திரை அகலும்போது...

"இரும்புத்திரையைத் தேவன் திருவுளமிரங்கி நீக்கும்போது பிரான்சீஸ்கன் சபையார் அங்கே இருப்பார்கள்." அமெரிக்க ஐக்கியதேசத்திலே நியூகனன் நகருக்குச்சமீபமாய்க் கொனெக்ரிக்கட்குன்றுகளிலுள்ள நித்திய சகாயமாதா சந்நியாசமடத்தின் சுலோகம் இதுவாகும். அப்போது இரும்புத்திரைநாடுகளில் அடங்கியுள்ள மக்களிடையே திரும்பவும் அப்போஸ்தல தொண்டு ஆற்றுதற்கென அங்கே வாலிபர்கள் திரளாகப் பயிற்றப்பட்டுவருகிறார்கள். இரும்புத்திரைநாடுகளைத் திருச்சபையிலே திரும்பவும் மனந்திரும்பிச் சேர்ப்பதையே இந்தப்புதிய அமெரிக்க மிஷனரியசபை தனதுகுறிக்கோளாகக் கொண்டுள்ளது. பரிசுத்த ஸ்தானத்தின் விருப்பை நிறைவேற்றுமாறு இது 1947-ம்ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இந்தவிதமான முயற்சி ஐரோப்பியநாடுகளிலும் ஏலவே தொட்டுத்தானே வருகின்றது.

---

### பாரமில்லாத அணுக்குண்டு

நெடுந்தூரத்துக்குப் பறந்துசெல்லும் ஆகாயபாணங்களில் அல்லது பீரங்கிக்குண்டுகளில் பக்குவமாகப் பொருத்திவிடத்தக்க பாரமற்ற இலேசான புதியஅணுக்குண்டுகளை அமெரிக்கவிஞ்ஞானிகள் கண்டுபிடித்துச் செய்திருக்கின்றார்கள். ஆரம்பத்தில் செய்யப்பட்ட அணுக்குண்டுகள் மிகப்பெரிய ஆகாயவிமானங்களில்மாத்திரம் கொண்டுபோகப்படக்கூடியனவாய் இருந்தன. இவைகளும் பீரங்கிக்குழல்வழியாகவே வெடிக்கும்படிசெய்யப்பட்டன. ஆனால், புதியமுறையோ அதிகம்பலம்பொருந்திய வகையிலே அதனைவெடிக்கச்செய்கின்றது. வெடிக்கும்முறையைப் புதுமாதிரியாக உருவாக்கியதாலே அணுக்குண்டின் பாரத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் வெகுவாகக் குறைத்துவிடுகின்றார்கள்.

## சுற்றுப்பிரயாணம்

ஊர்காவற்றுறை அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டத்தைசேர்ந்த பிள்ளைகளும், அதன் தலைவரான வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்களும் சென்றவாரம் ஓர்நீண்ட சுற்றுப்பிரயாணத்தை நடாத்தினார்கள். இதில்கலந்துகொள்ளும் அரியசந்தர்ப்பம் எனக்குங்கிடைத்தது. நாம் முதன்முதலாய் இலங்கையின் பழையதலைநகராகவிளங்கிய அனுராதபுரத்துக்குச் சென்றோம். அங்குள்ளசரித்திரசம்பந்தமான கட்டிடங்களையும், பௌத்த ஆலயங்களையும் சுற்றிப்பார்த்து, வாவியில் நீராடியபின் மாத்தளைக்குப் புறப்பட்டோம். அங்குள்ள பிரதான இடங்களையும், காட்சிகளையும் பார்வையிட்டு மறுநாட்காலை மன்னர்கள் வீற்றிருந்து வாழையடி வாழையாக ஆட்சிபுரிந்த கண்டிநகரை அடைந்தோம்.

அங்கே, கண்டிவாவி, கவர்னரின் மாளிகை, இன்னும்பல சரித்திரப்பிரசித்திபெற்ற இடங்களைப் பார்த்துக்கொண்டு நுவரெலிக்குப் புறப்பட்டோம். இப்பிரயாணம் பெரிதும் சந்தோஷமும், மிகப்பயங்கரமுமாயிருந்தது. எங்கும் தேயிலைச்செடிகளும், றப்பர்மரங்களும், அவைகளிடையே தொழிற்சாலைகளும், காலாபக்கமும் நீர்பாய்வதும் ஆதியனவெல்லாம் ஓர்பால் மனதைச் சந்தோஷப்படுத்தின. மறுநாள் ஒடுங்கிவளைந்த வீதிகளும், ஒருபக்கத்தில் உயர்ந்தமலைகளும், மறுபக்கத்தில் ஆழ்ந்தபள்ளத்தாக்கும் மனதில் பயங்கரத்தை எழுப்பின. சிறிதுநேரத்துள் நுவரெலிப் பட்டணத்தையடைந்தோம். இலங்கையின் அதிசஉயரமான பேதுருத்தாலகாலமலை இங்கே அமைந்துள்ளது. 8292 அடிஉயரமான இம்மலையின் உச்சியை அடையும்பாக்கியம் எம்மெல்லோருக்கும் கிடைத்தது. அங்கே முழந்தாளிட்டுச் சிலநிமிடங்களாக இலங்கைமுழுவதையும் மனந்திருப்பியருள வேண்டுமென்று கடவுளைப்பார்த்துப் பிரார்த்தித்தோம்.

அதன்மேல் காலாபக்கமும்பாயும் நீர்வீழ்ச்சிகளையும், அவை கற்களூடேயும், வீதிகளூடேயும், மரங்களூடேயும் விரைந்துசெல்லும் காட்சியையுங் கண்டுமகிழ்ந்தோம். இவைகளில்ஓர் வீழ்ச்சியையாவது எமதுவாண்டபூமிக்குக் கொண்டுபோனாலென்ன ? என்றஓர்யோசனையும் மனதிலே மின்னல்போல்தோன்றி மறைந்தது. இக்காட்சியை விட்டுச்செல்வது மிகவுங் கஷ்டமாகத்தான் இருந்தது.கொழும்பு தற்காலசுதந்தர இலங்கையின் தலைநகராக இருப்பதினால் அதையும்பார்த்தேதீரவேண்டுமென்ற ஆவலினால் நுவரெலியிலிருந்துகிளம்பினோம். கொழும்பை அடைந்தோம். அங்குள்ள நூதனசாலை, மிருககாட்சிச்சாலை, பாராளுமன்றம், செனற்கட்டிடம், பூந்தோட்டங்கள், துறைமுகம் ஆதியனவெல்லாம் ஒன்றும்தவறாது பார்த்தோம். ஆனந்தபரவசமுற்றோம். படம்பிடித்தோம். அன்று 'வெசக்'. புத்தர் பிறந்ததினம். எங்கும்குதூகலம். வீதிகள்எல்லாம் திறம்பட அலங்கரிக்கப்பட்டிருந்தன. தீபாலங்காரக்காட்சி ஓர்பக்கம். மேளவாத்தியங்களும் நாட்டியமும் மறுபக்கம். யானைகளின் ஊர்வலம் இன்னொருபக்கம், எப்பக்கம் திரும்பினாலும் ஒரே அதிசயத்துக்குரிய காட்சிகளே காணப்பட்டன.

மறுநாட்காலை கொழும்புமாநகரை விட்டு தலைவில்லுச் சந்தானுள்மாதாவின் திருக்ஷேத்திரத்தையடைந்தோம். அங்கு ஆவே! ஆவே!!என்னும் கீதத்தை இனிமையாகப் படித்தோம். செபமாலை செபித்தோம். பின்னர் அநுராதபுரம் புறப்பட்டோம். வழியில் 'காலஓயா' என்னும் ஆற்றில் ஸ்நானஞ்செய்தோம். மாலை நேரம் மருதமடுத்திருப்பதியைச்சேர்ந்தோம். அங்கு[illegible] யாருடன் [illegible]தோம். ஆராதனைமுடிந்ததும் புறப்பட்டு மறுநாட்காலை ஏழு மணிக்கு ஊர்காவற்றுறையை அடைந்தோம்.

900-மைல்தூரமான இந்தச் சுற்றுப்பிரயாணத்தை இனிதே நடத்திவைத்த எமதுகட்டளைக்குரவர் வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்களுக்கும், இன்னும் சென்றஇடங்களில் எமக்குவேண்டிய சகலவசதிகளையுஞ் செய்து எம்மைமகிழ்வித்த நண்பர்களுக்கும், அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்ட அங்கத்தவர்கள்போரல் நன்றி சமர்ப்பிக்கின்றேன்

S. லீனஸ்

## 2-ம் வருட மரண ஞாபகம்

எங்களால் என்றும் மறக்கக்கூடாதவிதமாய் நேசித்துவந்த எனதருமைப் பத்தாவும், எங்கள் நேசதந்தையும், கொழும்பு பிரிட்டோ பிறதர்ஸில் சில வருடங்களாகக் காவியாகப் பணியாற்றிவந்தவருமான ஸ்ரீமான் M. S. சூசை தேவசகாயம்பிள்ளை அவர்கள் மாணித்த இரண்டாவதுவருடம் இன்றோடு (10-6-51) பூர்த்தியாகின்றபடியால் இதைக்கண்ணுறும் வண. குருக்களையும், சங். சந்நியாசிகள் கன்னிகைகளையும், உற்றார் உறவினர்களையும் சகல கிறீஸ்துவ சகோதர, சகோதரிகளையும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காகக் கிறீஸ்துவகருணையுடன் வேண்டிக்கொள்ளத் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நேசபத்தாவை இழந்துதுயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரன், பேத்திகள்.

70, வாருயன்தெரு,
கொழும்பு.

## மரணசங்கதி

புங்குடுதீவுவாசாாய்ப் பலராலும் நன்குஅறியப்பட்டவரும், ஏறக்குறைய 35 வருஷகாலமாகச் சுதேசவைத்தியராய்இருந்து அரசினால் நற்சாட்சிப்பத்திரம் அருளப்பெற்றவருமான திரு. சூசைப்பிள்ளை அவர்கள் பலமாசங்களாக நோயாற்பீடிக்கப்பட்டுச் சென்ற 18-5-51 வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் தமது ஆத்துமத்தை இறைவன்வசம் ஒப்புவித்தார். மரிக்கும்போது இவருக்குவயது 59. இவருக்கு 3 புத்திரரும், 2 புத்திரிகளும் உள்ளனர். இவரின் பிரேதமானது மறுநாள்சாயந்தரம் திரளான இனசனர், சிநேகிதர் கூடியசமூகத்திலே அழகானபேழையில் வைக்கப்பட்டு பாண்டுவாத்தியத்துடன் குருவானவர் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, புதிதாக அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கஞ்செய்யப்பட்டது. இவரையிழந்துதுன்புறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளோடு நானும் அனுதாபப்படுகிறேன். இதைக்கண்ணுறும் சகோதர சகோதரிகள் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படியாய் அதிதாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

R. I. P. —கடிதர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

ஆலந்தலையில் கோவில்கொண்டிருக்கும் அதி அற்புதநாதரது அளவில்லா இரக்கத்தாலும், சில்லாலை ஆரோக்கிய நாயகியின் தயைநிறைந்த வேண்டுதலினாலும், அர்ச். தெரேசம்மாள்முதலாம் அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டினாலும் எனது கணவருக்குற்ற பயங்கரபிணி அகன்றது. வேண்டுதலின்படி இதைப் பிரசுரிக்கின்றேன். காலந்தாழ்ந்தமையை மன்னிக்க அவர்களைவேண்டுகின்றேன்.

சில்லாலை இ. அ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது வர்த்தமானம்

### இந்துதலைவரின் பாராட்டுரை

தருமபுரத்தில் 'ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீஞானபுரீசுவாசுவாமி' ஆலய உற்சவத்தைபொட்டி நடந்த மகாநாட்டைத் திறந்துவைத்த சென்னை அரசாங்க பகிரங்கசேவைக் கம்மிஷனரின் தலைவர் திவான்பகதூர் டி எம். நாராயணசாமிபிள்ளை அவர்கள் பேசுகையில்பின்வருமாறு கூறினர்: "கிறீஸ்தவகுருமாருக்கும், கிறீஸ்தவமக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்துவருகிறது. உயர்ந்தபடிப்பும், திறமையுமுள்ளவர்கள்கிறீஸ்தவகுருக்களாகச் சேர்க்கப்படுகின்றார்கள். நமது மடாலயங்களில், தம்பிரான்கள் ஆத்மீகஞானமும், சமூகத்தொண்டுபுரியும் திறமையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்; அதற்கானபயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும்."

### அகண்ட ஹிந்துஸ்தான்

இந்தியாவிலே ஹிந்துமகாசபாவின் தலைவர்கள் அகண்ட ஹிந்துஸ்தானை ஸ்தாபிப்பதே, அதாவது பாகிஸ்தானை மீண்டும் இந்தியாவுடன் இணைப்பதே தங்கள்நோக்கமென்று ஓயாதுசொல்லி வருவதன்பயனாகப் பாகிஸ்தானில் "ஹிந்துஸ்தான் ஹமாரா" என்றொரு புதியகட்சி உதயமாகியுள்ளது. இப்பொழுது 'இந்திய யூனியன்' எனப்படும் பகுதியைப் பாகிஸ்தானுடன் சேர்த்துவிடவேண்டுமென்பதே இக்கட்சியாளரின் ஆவல். "இந்தோ-பாகிஸ்தான் உபகண்டம் முழுவதையும் முஸ்லீம்களின் ஆதிக்கத்தில் கொண்டுவரும நோக்கத்துடன் பாகிஸ்தானில் 'ஹிந்துஸ்தான் ஹமாரா' என்ற புதிய கட்சி ஆக்கப்பட்டிருப்பது இந்தியஅரசாங்கத்துக்குத் தெரியுமா?" என்று அங்கத்தவர் ஒருவர் அன்றுகேட்டபோது "அதுபற்றி அரசாங்கத்துக்கு ஒன்றும் தெரியாது" என்று டக்றர் பி. வி. கேஸ்கார் அவர்கள் பதில் அளித்தனர்.

### இந்தியகாங்கிரஸ் தகராறு

இந்தியா சென்றசிலவாரங்களிலே உலககவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இந்தியதேசிய காங்கிரஸின் மாஜி தலைவரான ஆச்சாரியா கிருபளானியும், அவர்மனைவியார் சுசேதாவும் காங்கிரஸிலிருந்து விலகிக்கொண்டார்கள். நிகழும் ஆனிமாதம் 16-ம் 17-ந்திகதிகளிலே பறனாநகரில் ஓர்மகாநாடுகூட்டிக் காங்கிரஸைஎதிர்க்குமாறு "மக்கள் காங்கிரஸ்" எனும் ஓர்ஸ்தாபனத்தைநிறுவ இவர்கள்உத்தேசித்திருக்கின்றனர். அன்று திரு. ஆச்சாரியா கிருபளானிஅவர்கள்பேசியபோது முற்போக்கான சக்திகளும், பிற்போக்கானசக்திகளும் சேர்ந்திருக்கமுடியாதென்றும் ஸ்ரீஜவகர்லா நேரு அவர்களின் அரசாங்கத்திற்கு ஓர் எதிர்க்கட்சியை உண்டுபண்ணுவது தான் இனிமேல் தமதுஒரே இலக்காகுமென்றும், இந்திய பொதுமக்கள் உணவு, உடை, வீடுஆகியாம் முக்கிய தேவைகளைப்பெறாது வருந்துகின்ற இந்தவேளை தமதுசொந்த மக்களுக்குச்சேவைபுரிவதே தமதுகடனென்றும் தெரிவித்திருக்கின்றார். இவர் கடந்த 43 வருடகாலமாக இந்திய காங்கிரஸில் ஓர்அங்கத்தவராயிருந்து வந்தார்.

### மாஷலின் எச்சரிக்கை

போர்லின்நகரிலே முன்னர் சோவியற் ஹைகம்மிஷனராகவிருந்த மாஷல் சொகோலொவ்ஸ்கி என்பவர் ஜேர்மனி சரணாகதியடைந்த வருடாந்த தினமன்று பேசியபோது, "மேற்கு ஐரோப்பிய அரசுகளுடன் யுத்தத்துக்கு ருஷியமக்கள் தங்களை ஆயத்தஞ்செய்ய வேண்டுமென்று முன்னில்லாத மிகக்கடுமையான எச்சரிக்கை விடுத்தும், கோறியாவிலே தாங்கள் தோல்வியடைந்தபின் மேற்குஐரோப்பாவிலே அமெரிக்கா யுத்தத்துக்கு ஆயுதஞ்செய்வதாகக் குற்றஞ்சுமத்தியும் இருக்கின்றார். சோவியற்மாஷலின் அந்தஎச்சரிக்கையானது, மேற்கு ஐரோப்பியஅரசுகள் செய்துவரும்தற்காப்புத்திட்டமானது ருஷியாவை ஆக்கிரமிப்பதற்கேஎன்று ருஷியமக்களை ஆவேசப்படுத்திவிடும் ஓர் தந்திரோபாய[illegible] கூறப்படு[illegible].

## நாளு சங்கதிகள்

—இன்னும் பத்துத்தினங்களிலே உலகின்மகாப்பெரிய அதிர்வெடிகள் பசிபிக்சமுத்திரத்திலுள்ள எனிவிரக் எனுமிடத்திலே வெடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அங்கே அமெரிக்க விஞ்ஞானிகள் இதுவரை செய்யப்பட்டவைகளிலும் மகாப்பலம்வாய்ந்த அணுக்குண்டுகளை வெடிக்கச்செய்யவிருக்கின்றார்கள்.

—நெல்லரிசிஉணவு சாப்பிடுவதால் சந்தானப்பெருக்கம் அதிகரிக்கிறதா என்ற ஓர்கேள்வி இந்திய அரசாங்க அதிகாரிகள்மத்தியில் பிறந்திருக்கிறது. அங்கே நெல்லரிசிஉணவு சாப்பிடும் திருவாங்கூரிலே சனப்பெருக்கம் நூற்றுக்கு 23 வீதமும் சென்னைஇராச்சியத்தில் 14·3 வீதமும் அதிகரித்திருக்க, பிறஉணவுகள் சாப்பிடும் பகுதிகளில் சனப்பெருக்கவீதம் வெகுவாகக் குறைந்திருப்பதே அதற்குக்காரணமாகும்.

—இந்தியாவிலே காசிநகர சர்வகலாசாலையைச்சேர்ந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஓர் உதவிப்போசிரியராய் இருந்துவருகின்ற திரு. இராஜகுமார் சௌபாஎன்பவர் சமீபத்திலே பதினைந்தாவது எம். ஏ. பட்டம் பெற்றிருக்கின்றார். தற்போது இவருக்கு வயசு 55. இதற்குமுன் இவர்பெற்றுள்ள பதினன்கு எம். ஏ. பட்டங்களிலும் கடைசியாகப்பெற்றபட்டம் மனோதத்துவசாஸ்திரத்திலாகும்.

—தினமும் முயல்இறைச்சிஉண்பது மலேரியாவைச் சுகப்படுத்துமென்று பினங்கிலே முன்னர் மலேரியாகண்டு வருந்திய ஒருவர் தெரிவிக்கின்றார். தினமும்முயலிறைச்சி கிடைக்கும்படியாக இவர் ஓர்முயல்வளர்க்கும்பண்ணையையும் ஆரம்பித்திருக்கிறார். முயல்சாப்பிடும் காய்கறிகளின்பலனாக அதன் இறைச்சியில் குயினைன் சத்து இருக்கக்கூடுமென டக்றர்ஒருவர் கூறுகின்றார்.

—பிரித்தானியபாராளுமன்றத்திலே சோஷலிஸ்ற்கட்சி அங்கத்தவரான திரு. ஆர். டேவிஸ்அவர்கள் சுகவீனங்காரணமாகத் தமதுபதவியை இராசிநாமாச் செய்துவிட்டமையாலே, தற்போது பிரித்தானிய தொழிற்கட்சி அரசாங்கத்தைச்சேர்ந்த அங்கத்தவர்களின்தொகையானது சகல எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் தொகையிலும் மூன்றுபேரால்மாத்திரம் கூடுதலாயிருக்கிறது.

—லேக்சக்செஸிலே ஐந்துவருடகாலமாகத் தற்காலிகமாக இருந்துவந்த ஐக்கியநாடுகளின் தலைமைக்காரியாலயம் மான்ஹற்றன் தீவிலே நியூயோக்நகரின்மத்தியில் வானளாவ அமைக்கப்பட்டிருக்கும் புதியகட்டடத்திலே சென்ற 20-ந்திகதிமுதல் பூரணமாக ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. 39 மாடிகளையுடைய இக்கட்டடத்தைக் கட்டிமுடிக்க ஆறரைக்கோடி டலர் செலவாயிற்று.

—சென்னைஅரசாங்க மிருகபலித் தடைச்சட்டமானது இந்தஆனிமாதம் 1-ந்திகதிமுதல் கடைமுறைக்கு வந்திருக்கிறது. அதன்படி ஆலயத்துக்குமுன் மிருகத்தையோ, அன்றேல் மீகாழிபோன்றவைகளையோ வழிபாடு காரணமாகப் பலியிடக்கூடாது. பலியிடும் சடங்குகளில் யாருமேகலந்துகொள்ளவுங்கூடாது. இச்சட்டத்தை மீறுகிறவர்களுக்கு மூன்றுமாதச் சிறைத்தண்டனையோ அல்லது மூவாயிரம் ரூபா அபராதமோ விதிக்கப்படலாமாம்.

---

### கோடி அற்புதர் — பதுவை
### அர்ச். அந்தோனியார் சரித்திரம்

ஆதிலர்க் கன்னதாதாவாகவும், துயருற்றோர் துன்பந்துடைக்கும் துணைவராகவும் விளங்கும் அர்ச். அந்தோனியாரின் உண்மையான வரலாற்றைப் பல நூல்களின் துணைகொண்டு சுருக்கமாகவும் விளக்கமாகவும் இலகுவான தமிழிற் கூறும் நூல். பள்ளிபிற்பயிலும் மாணவர்க்கும் மற்றோர்க்கும் கைக்கு அணிகலமாக விளங்கும் சிறப்பானமுறையில் பதிப்பிக்கப்பட்டது.

செபங்கள், மன்றாட்டுக்கள், பிரார்த்தனைகள்
என்பனவும் அடங்கியுள்ளன.

**பிரதி ஒன்றின் விலை சதம் 75**

(தபாலில் வேண்டுவோர் ரூ. 1-க்குப் போஸ்டல்ஓடர் அனுப்புக.)

அர்ச். பிலோமினு அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

---

## உதிர்ந்த முத்துக்கள்

றொசெந்தால் ஓர்யூதனுயிருந்து பின்னர் கத்தோலிக்கதிருமறையில்சேர்ந்தவன். பெரியதீரன். "நீ சேர்ந்திருக்கும் புதியமதத்தினுல் நீ அடைந்த பயன்என்ன?" என்று ஒருநாள் நண்பன்ஒருவன் அவனிடம்கேட்டான். "என்வாழ்விலிருந்தே அது பயத்தை அகற்றிவிட்டது. பசிபிக்யுத்தகளத்தில் பயங்கர நாசத்தின்மத்தியில் நான் இருந்தபோதிலும் அஞ்சவில்லை. நான் ஏன் பயப்படவேண்டும்? 1938-ம் ஆண்டு ஆவணி பத்தொன்பதாம்நாளிலிருந்து நான்கத்தோலிக்கன். சாவு வருகையில் எனக்கு ஓர்அரியசந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறதெனக் கத்தோலிக்கமதத்திலிருந்து நான் அறிந்திருக்கிறேன். மோட்சம்செல்வேன்என்ற நம்பிக்கையே எனக்குஉலகில் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இந்தநம்பிக்கையைக் கத்தோலிக்கமறையே எனக்குக் கொடுத்தது. யப்பானிய பீரங்கிகளுக்குமுன் இருக்கையிலும் நான்பயமின்றி முன்னேறிச்சென்றேன். மறுஉலகம்உண்டு; ஒருசிநேகிதனைச் சந்திப்பதுபோல் கடவுளைச் சந்திக்கலாம் என்ற நினைவு என்வாழ்க்கையை மாற்றிவிட்டது. கத்தோலிக்க வேதவிசுவாசம் எனக்கு மனஅமைதி கொடுத்திருக்கிறது.

* * *

இரண்டாவது ஜேம்ஸ் இங்கிலாந்து தேச அரசன். 1690-ம்ஆண்டு லாத்ருப்என்றஇடத்திலுள்ள மடத்தைச் சந்திக்கச்சென்றான். முன்னர் அந்த மடத்தில்வசித்த ஒருசந்நியாசியார் இன்னும்அதிக ஏகாந்தத்தை நாடித் தூரத்திலுள்ள ஒருகாட்டில் வசித்துவந்தார். அரசன்அவரைப் பார்க்க விரும்பினான். தன்நண்பர்களுடனும், ஒருவழிகாட்டியுடனும் அவரைப்பார்க்கப் புறப்பட்டான். அந்தச்சந்நியாசியார் ஒருகாலத்தில் பேர்பெற்ற யுத்தவீரர். அவரதுபேர் மாக்குயிஸ் தெநோஸி. அரசன் நடுக்காட்டை அடைந்து அவருடன் சம்பாஷித்து, பலகேள்விகளை அவரிடம் கேட்டான். ஒருகேள்விக்குப் பதிலளிக்கையில், ஒவ்வொருநாளும் அதிகாலை 3-30 மணிக்கு மடத்துக்கோவிலில் நடைபெறும் திவ்வியபலிபூசைக்குத் தான் போய் வருவதாக அவர்கூறினர். அரசனுடன்சென்றஒருவன் அதை நம்பவில்லை. "இந்த அடர்ந்தகாட்டில் இருட்டானநேரத்தில் தாம் எப்படிப் போகமுடியும்? மழையிலும்பனியிலும் உங்களால் அவ்வளவுதூரம் செல்லமுடியாது" என அவன்கூறினன். அப்போது வயோதிப சந்நியாசியார் சாவதானமாய்ப் பேசினர். "உலக அரசருக்கு நான்சேவைசெய்கையில் இதைவிடப் பெருங்கஷ்டங்களை எதிர்த்து நின்று மேற்கொண்டிருக்கிறேன். அவ்வாறாகப் பரலோக அரசருக்குச் சேவைசெய்வதில் ஏற்படும் கஷ்டங்களைக்கண்டு பின்வாங்குவது தகுமா?" என்றார். "உண்மைதான். மானிட அரசர்களுக்காக என்னவாறாலும் செய்யத் தயாராயிருக்கும் மனிதன் [illegible]லோக அதிபருக்காக ஒரு [illegible]காரியம்முதலாய்ச் செய்யப் பின்வாங்குகிறான். இது உண்மையாகவே பெரும்அவமானம்" என அரசன் பதிலளித்தான்.

## ஆசிரிய உலகம் வேண்டுவது

"ஆசிரியஉலகம் வேண்டுவது புருஷத்துவம்; தொகையல்ல. உங்கள் நோக்கங்கள் எப்போதும் முன்னேக்கியும், மேனேக்கியும்இருக்கவேண்டும்." இவ்வாறு டில்லிச்சர்வகலாசாலைக் கல்விப்போசிரியரும், அகிலஉலக ஆசிரியசம்மேளனத் தலைவருமாகிய போசிரியர் கிறிஸ்-டி-யங்அவர்கள் பலாலி, அரசினர் ஆசிரியகலாசாலையில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் குறிப்பிட்டார். மேலும் அவர்கூறியதாவது:

"நான்உங்கட்கு ஒருகதை சொல்லவேண்டும். ஒருவர் ஒருவழியாற் சென்றுகொண்டிருக்கும்போது, அவர்சந்தித்த ஒருவனைநோக்கி, "நீ எதற்காக வேலைசெய்கின்றாய்?" என்று கேட்டார். "நான் நாளாந்தம் மூன்று ரூபா பெறவேண்டும்; அதற்காகவே வேலைசெய்கின்றேன்" என்றான் அவன். இரண்டாவதாக அவர் சந்தித்தவன் கடுமையாக வேலைசெய்துகொண்டிருந்தான். அவனையும்நோக்கி, அவர் அக்கேள்வியைக் கேட்டபொழுது அவன், "நான் இவ்வேலையை முடிக்கவேண்டும்; அதற்காகக் கடுமையாக வேலைசெய்யவேண்டியிருக்கிறது" என்று விடையளித்தான். மூன்றாவதாகச் சந்தித்தவனே மலர்ந்த முகத்தோடு, "நான் ஒருகலாசாலையை ஆக்கவேண்டும்; அதற்காகவே வேலைசெய்கிறேன்" என்றான்.

இம்மூவரில் யாரைப்போல நீங்கள் நடந்துகொள்ளப்போகிறீர்கள்? பணத்திற்காகக் கடமைசெய்தவனைப் போலவா? பாடத்திட்டத்தைமுடித்தவன்— வேலைசெய்யவேண்டுமென்பதற்காக வேலைசெய்தவன் போலவா? கலாசாலையை— மாணவருலகை ஸ்தாபிக்க முயன்றவன்போலவா? தனித்தேவைகளையும், சமூகதேவைகளையும் பூர்த்திசெய்ய ஆசிரியஉலகம் சேவைசெய்யவேண்டும்."

போசிரியருடையபேச்சு வேடிக்கைக்கதைகளையும், உதாரணங்களையும் கொண்டதாகஅமைந்து அறிவிற்கு விருந்தளித்தது. அச் சொற்பொழிவின்போது கலாசாலைஅதிபர் திரு. பி. சவிரிமுத்துஅவர்கள் தலைமைவகித்தார்.

K. S.

---

—இந்தியஉள்நாட்டு மந்திரியாரான திரு. எஸ். இராசகோபாலாச்சாரி அவர்கள் சென்ற 29-ந்திகதி இந்திய பாராளுமன்றத்தில் பேசியபோது, தமக்குச் சோதிடத்தில் நம்பிக்கையில்லையென அழுத்தமாகத் தெரிவித்துள்ளார். "என்னைப்பொறுத்தவரையில் நான்சோதிடத்தில் துளியளவும் நம்பிக்கையில்லாதவன்" என்பனவே அவர்கூறிய மொழிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

### ஆனிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 8 | அர்ச். மெதார்த்தப்பர் | (வெ) |
| சனி | 9 | அர்ச். பிரிமுசப்பர் | (வெ) |
| ஞா | 10 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 4-ம் ஞாயிறு — அர்ச். மார் கரித்தம்மாள் | (ப) |
| திங் | 11 | அர்ச். பர்ணபாஸ் | (சி) |
| செ | 12 | அர்ச். பகுந்தருளப்பர் | (வெ) |
| புத | 13 | அர்ச். பதிவை அந்தோனியார் | (வெ) |
| வியா | 14 | அர்ச். பசிலியார் | (வெ) |

# சத்தியவேத பாதுகாவலன்

### 1951-ம் ஆண்டு ஆனிமாதம் 7-ந் திகதி

## திரு இருதய நேசம்

நன்றியறிதல் என்பது ஓர் மகாத்துமிய குணம். மகத்தான அதாவது பெரிய இருதயங்களிலேயே நன்றியறிதல் குறைவின்றி விளங்கும். ஒரு இருதயம் எத்துணைபெரிதோ அவ்வளவே அதனிடத்திற் பிறக்கிற நன்றியறிதலுமாம். ஒரு மாதா ஒருபிள்ளைக்காக எத்தனை பாடுகளைப் படுகிறாள். எவ்வளவாக அதைத்தன் நெஞ்சத்திலே நிலைபெறஇருத்தி, மறந்தும் அதன்நினைவை விடாதவளாகி அதன்பேரிலே தன் அன்பையெல்லாம்பொழிகிறாள். ஆயினும்பிள்ளை தன் தாய்மேல் உருக்கமற்றிருப்பதையும் காண்கிறோம். "பெற்றவள் மனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்றமுதுமொழிபலமுறையிலே மெய்யாகப்போகின்றது. ஏனெனில், பிள்ளையுடைய இருதயம் சிறிது. தாயுடைய இருதயம் பெரிது. அவள் தன்மகவைத் தன் கண்மணிபோல நேசித்துப் பாராட்டுகிறாள். அது தாயின்நேசத்தை உணராமலும் பிரதிஅன்பைக் காட்டாமலும் தன்பாதுகாப்பையும் தன்உதரபூர்த்தியையுமே அவாவுகின்றது. தாயிடத்தில் அதற்கு ஏதும்பற்றுதல் உண்டெனக் காணப்பட்டால் அப்பற்றுதல் வேண்டிய வேண்டியபோதெல்லாம் அமுதுஊட்டுகிறவள் என்றமையாலே, அந்த அமுது கிடைக்குந்தனையுமே நிலைப்பது எனத்தோன்றும்.

நம்முடைய இருதயங்களை யேசுக்கிறீஸ்துநாதரின் அளவில்லாத தேவஇருதயத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம்எல்லாம் சிறுபிள்ளைகளிலும் கேடானசிறுகுணம் உள்ளவர்கள். தேவஅன்புக்குப் பிரதி அன்புகாட்டும் பெருந்தன்மை நம்மிடத்திலேஒருசற்றும் இல்லை. ஆ! யேசுநாதர்மனம் பித்து, என்மனம்கல்லு என்றல்லவோ சொல்லவேண்டியிருக்கிறது. அநந்த பரிபூரணராயிருக்கிற கடவுள் அற்பராகிய நம்மிடத்திலே அன்புகூரச் சித்தமாகிறார். அவருடைய நித்தியமாகிய சீவியமானது நமக்காகவே செலவிடப்படுவதுபோல் இருக்கின்றது. நம்மைஅவர் தாம் உள்ளளவும், அதாவது அநாதியாய்ச் சிநேகிக்கிறார். நமது பேரிற் தம்மிடத்திலேயுள்ள ஆச்சரியமான அன்பை நாம் அறியும்படி நமக்காகத்தம்மை மானிடரூபமுமாக்கினார். நமது இருதயத்தைப்போல்தாமும் ஓர் இருதயம்உடையவரானார். அந்த மானுடஇருதயம் அவருடைய அளவில்லாத அன்புமுழுமைக்கும ஆலயமும் இருப்பிடமுமாயிற்று. அத்திரு இருதயத்தினால் அவர்நம்மை மட்டின்றி நேசித்தார். மனிதரை மட்டின்றிநேசிக்கிற என்னிருதயம் இதோஎன்று அதனை நமக்குக் காண்பிக்கிறார். ஆயினும்நமது மனம் இளகாதிருக்கின்றமை அதிசயம்! அதிசயமே!! ஓ பேரின்பப்பெருக்கே, ஓ கடவுளின் மானுடஇருதயமே! உன் விசாலம் எவ்வளவோபெரிது! உன்னிடத்திலின்றுசுவாலித்து விளங்குகின்ற அன்பின் அக்கினியின்வேகம் உகாந்த அக்கினியிலும் பெரிது! பெரிது! ஆயின் நம்இருதயமோ சுருங்கக் குவிந்ததாய் இறுகிச்சிறுத்ததாய்த் தனக்குள்தானே மடங்கிஒடுங்குவதாய் இருக்கின்றதே.

இனிமேலாவது நம்மை மட்டின்றி நேசிக்கும இருதயக் கடவுளை நாமும் நேசிக்கவேண்டாமா? இந்தஆனிமாசமானது திருவிருதயமாசம் என்னப்படுகின்றதே. இந்த மாசத்திலேயாயினும் அன்பின் சமுத்திரமாகிய யேசுநாத சுவாமியிடத்தில் அன்புசெய்யப் பிரயாசப்படுவோமாக. மனமென்னும் வில்லிலே பத்தியென்னும் நாணியைப்பூட்டி உருக்கமுள்ள பெருமூச்சுகளென்னும் அம்புகளைக் கடவுளின் திருவிருதயத்தை நோக்கி அடிக்கடி எய்வோமாக. அப்படிப்பட்ட நேசப் பெருமூச்சுகள் அல்லது மனவல்லயச் செபங்களை நாமே நேரத்துக்கு நேரம் எங்கள்அன்பு ஏவித்தருகிறபடி உருப்படுத்திக்கொள்ளலாம். புத்தகங்களிலேயுள்ள மனவல்லயங்களையும் எடுத்து ஞாபகமென்னும் அம்பறாத்தூணியில் சேமித்துவைத்திருந்து வேண்டியபோது எடுத்து மனமாகியவில்லிற் தொடுத்துத் தேவ இருதயத்திற் சேர அழுத்திவிடுவோமாக. அப்படியான சில மனவல்லயங்கள் வருமாறு:— "யேசுநாதருடைய மதுரமுள்ள திரு இருதயமே, அடியேன் எப்போதைக்கும் மேன்மேலும் உம்மைச் சிநேகிக்க அனுக்கிரகஞ் செய்தருளும்" — "யேசுவின் திவ்விய இருதயமே, எங்கள் பேரில் இரக்கமாயிரும்" — "யேசுவின் மதுரமான இருதயமே, என்சிநேகமாயிரும்."

## குடிசனமதிப்பு

இலங்கையிலே வருகிற ஆடிமாதம் 23-ந்திகதி ஆரம்ப குடிசனமதிப்பும், அடுத்த புரட்டாசிமாதம் 17-ந்திகதியன்று இறுதிக்குடிசனமதிப்பும் எடுக்கப்படவேண்டுமெனச் சென்றசித்திரைமாதம் திட்டமாக முடிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால், இலங்கையிலே கடுதாசி அருந்தலாயிருப்பதையும், காகிதவிலை அதிகமாயிருப்பதையும் முன்னிட்டுக் குடிசனமதிப்பு எடுப்பது 1952-ம் ஆண்டு[illegible]டிருக்கிறது.

## சுதேசவர்த்தமானம்

### ஆடிச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே இரண்டாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு வருகிற ஆடிமாதம் 2-ந்தேதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடந்தேறும். சங். எம். எவ். எஸ். பிள்ளை நீதியரசர்வந்து விசாரணை நடத்துவாரென அறிகின்றோம்.

### பொன் யூபிலிவிழா

இணுவில் மிஷன்வைத்தியசாலை ஸ்தாபகமான ஐம்பதாம்ஆண்டு நிறைவுவிழாவை 1953-ம்ஆண்டிலே கொண்டாடுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இந்தயூபிலிஞாபகார்த்தமாக அங்கே மூன்றுலட்சம் ரூபா செலவில் நவமானதோர் மருத்துவசாலையை அமைக்கத் தீர்மானமாயிருப்பதாகவும், அதற்குத் தேவைப்படும் நிதியைச்சேகரிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் தெரியவருகிறது. அப்போது இவ்வைத்தியசாலையின் சரித்திரசம்பந்தமான ஓர் புத்தகமும் வெளியிடப்படவிருக்கிறது.

### குடிதண்ணீர்க் கஷ்டம்

ஊர்காவற்றுறையை மீளவும் குடிதண்ணீர்க் கஷ்டம்பிடித்து வாட்டத்தொடங்கியிருக்கிறது. இம்மாசம் 1-ந்திகதி தொடக்கம் அங்கு பட்டினசங்கம் பிறவூரிலிருந்து லொறிகளிலே குடிதண்ணீர் தருவித்துச் சனங்களுக்கு உதவிவருகிறது. ஊர்காவற்றுறையில் தொடர்ந்து மூன்று வருடங்களாக ஏற்பட்டிருக்கும் கோடைவாட்சியே அம்மூன்று வருடங்களிலும் குடிதண்ணீர்க் கஷ்டமுண்டாகக் காரணமாகும். இன்னும் ஊர்காவற்றுறை மோட்டர்பாதையும் எஞ்சினில் பழுதகண்டமையாலே சடந்த ஐந்துவாரங்களாக மோட்டர்பாதைப் போக்குவரத்தும் நின்றுவிட, கையால்வலிக்கும் பாதைப்படகு முன்போல இழுப்புப்பறிப்பில் நிற்பதாலே சனங்களுக்கு மற்றுமோர் பெருங்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

### பண்ணைத்துறை மோட்டர்பாதை

பண்ணைத்துறைக் கடற்பாதைக்கும், அக்கரைப்பாதைக்குமிடையே புதிய மோட்டர்பாதை ஒன்று சென்ற 29-ந்திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் போக்குவரத்து நடக்கத்தொடங்கியிருக்கிறது. இதன் இருபக்கங்களிலும் சனங்கள் வெயிலுக்கும், மழைக்கும் ஒதுங்கியிருக்கத்தக்கதாய்க் கூடாரத்துடன்கூடிய ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மத்தியிலுள்ள வெளியிலே கார்கள், வண்டிகள் நிறுத்தப்படுகின்றன. இது பண்ணைக்கரையிலிருந்து எதிர்காற்றிலே அக்கரை போய்ச்சேரப் பத்துநிமிஷமும், அக்கரையிலிருந்து நேர்காற்றிலே பண்ணைத்துறைவந்துசேர ஐந்துநிமிஷமும் எடுக்கின்றது. இதிலே போக்குவரத்து நடத்துவது மிகவும்சௌகரியமாயிருப்பதாகச் சனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

### மற்றோர் சங்கடமுறையீடு

காங்கேசன்துறையிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து தற்போது மற்றோர்முறையீடு பிறந்திருக்கிறது. அதாவது அங்குள்ள சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து எழுகின்ற புழுதிப்படலமும், புகையும் சோழகக்காற்றில் அள்ளுண்டுவந்து ஆஸ்பத்திரியில்கிடக்கும் நோயாளருக்கும், பணியாளருக்கும் மிகுந்தகஷ்டத்தை உண்டுபண்ணுகிறது என்பதே. ஆஸ்பத்திரிவளவுமுழுவதும் இந்தச்செயற்கை மூடுபகார் உறைந்துபோயிருக்கிறதாம். இந்தப்புழுதியைச் சுவாசிப்பது நோயாளருக்குக் கெடுதியை விளைப்பதைமுன்னிட்டு, இப்பிரச்சினை மிக மோசமானதென்று அப்பகுதி வைத்[illegible]அதிகாரிகளுக்கு அறிக்[illegible]கிறார்.

### சமூகசேவைத் தலைவர்

சமூகசேவைகளின் உபதலைவராய் இருந்துவந்த டக்றர் ஆர். எல். திருச்செல்வம் அவர்கள் சமூகசேவைகளின் ஐக்கிய தலைவராக அரசாங்க உத்தியோகசேவைக் கம்மிஷனாலே நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இம் மாதம் 1-ந்திகதியன்று இவர் அப்பதவியைக் கையேற்றிருக்கின்றார்.

### செனற்றர் கனகநாயகம்

யாழ்ப்பாணம் பிரபலநியாயவாதியான செனற்றர் எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் சென்ற 1-ந்திகதி வெள்ளிக்கிழமை காலை ஆகாயவிமானத்திலே அமெரிக்க ஐக்கியதேசம் சென்றிருக்கின்றார். அமெரிக்கதலைவர்கள்-நிபுணர்களது மான்யத்தைக்கொண்டு இவ்வருடத்திலே இலங்கை நான்குபேரை அத்தேசத்துக்கு அனுப்பவேண்டியது. இவர்களில் ஒருவராகத் தெரிபப்பெற்ற செனற்றர் கனகநாயகம் அவர்கள் அத்தேசத்திலே நான்குமாதகாலம் சுற்றுப்பிரயாணஞ்செய்வார்.

### தலைமன்னார் இராறெயின்

கொழும்பிலிருந்து ஞாயிற்றுக்கிழமைகளிலே தலைமன்னார் செல்லும்இராறெயின்கள் இம்மாதம் 3-ந்திகதி முதல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வாறே தலைமன்னாரிலிருந்து ஞாயிற்றுக்கிழமைகளில்கொழும்புக்குச்செல்லும் இராறெயின்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இம்மாதம் 3-ந்திகதி முதல் தனுஷ்கோடி—தலைமன்னார்ப் போக்குவரத்துக் கப்பலை ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுத்திவிடத் தென்னிந்திய றெயில்வே அதிகாரிகள் தீர்மானித்திருந்தனர். அதனால் இலங்கை றெயில்வே அதிகாரிகளும் ஞாயிற்றுக்கிழமைகளிலே கொழும்பு—தலைமன்னார்ப் போக்குவரத்து இராறெயின்களை நிறுத்திவிட்டிருக்கின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளிலே பிரயாணிகள், சாமான்களின் போக்குவரத்து வெகுவாகக் குறைந்துவிட்டமையே தென்னிந்திய றெயில்வே அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் தனுஷ்கோடி—தலைமன்னார்க் கப்பல்போக்குவரத்தை நிறுத்தக் காரணமாகும்.

### புடவை நெசவுத் தொழிற்சாலை

இலங்கைக்குத் தேவையான புடவைகளை உற்பத்திசெய்யும் நோக்கத்துடன் ஓர் அரசாங்க நெசவுத்தொழிற்சாலையை அரசினர் ஸ்தாபிக்கும் திட்டமொன்றைக் கைத்தொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் செய்திருக்கின்றார். அதிலே பங்குகள்வாங்க ஊரவர்களுக்கு உரிமை அளிக்கப்படும். இப்புதிய நெசவு தொழிற்சாலைக்குத் தேவையான யந்திரங்கள், மற்றும் சாதனங்களைவாங்க 1 கோடியே 70 லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளைப் பெறுவதற்கான கேள்விப் பத்திரங்கள் சமீபத்திலே கோரப்படவிருக்கின்றன. இந்த நெசவுதொழிற்சாலை பூரணமாகவேலை செய்யுமிடத்து, அதில் நெசவுசெய்யப்படும் புடவைகளின் விற்பனையிலிருந்து வருடமொன்றுக்கு 1 கோடியே 80 லட்சம் பவுண் வருமானம் கிடைக்குமென்றும், அதிலே சுமார் 1,000 இலங்கைத் தொழிலாளருக்குவேலை கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதனை ஸ்தாபிக்கும் இடம் இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

—பரிசுத்த பாப்பரசருடையவும், நியூயோக்கர் அதிமேற்றிராணியாரான கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவருடையவும் வர்ணப்பிரதிமைப்படம் ஒன்று அமெரிக்கஐக்கியதேசத்திலே யூன்னர் எதற்குமே கொடுபடாத வகையில் 3,000 டலர் அதாவது 10,700 ரூபாவரையில் விலைகொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மானிப்பாய்

## அர்ச். அந்தோனியார்கோவில்



மானிப்பாயிலே கோவில்கொண்டிருக்கும் அர்ச். அந்தோனியார் திருநாள்நோவனைகள் ஆரம்பமாகிவிட்டன.

சனிக்கிழமை (16-6-51) மாலை 8-00 மணிக்கு மேற்றிராணியாண்டவர் அவர்கள் வேஸ்பர் பாடுவார்கள்.

ஞாயிற்றுக்கிழமை (17-6-51) காலை 7-30 மணிக்குப் பாடற்பூசையும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும்.

இப்பதியிலே இத்திருநாள் கொண்டாடப்படுவது, இது ஐந்தாவது வருடமாகும். சென்ற நான்குவருடங்களிலும் யாழ்ப்பாணப்பட்டணத்திலிருந்தும், நாவாந்துறை ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாயிலிருந்தும், இளவாலை, சில்லாலை, மாதகல், பண்டத்தெருப்பு விசாரணைப் பங்குகளிலிருந்தும் நல்லூர்மீசாப் பக்தர்களும் பெருந்தொகையாய்வந்து எமக்குத் தென்பு அளித்தனர். சென்றவருடங்களிலும் பார்க்க இவ்வருடம் கூடிய தொகையான பக்தர்கள் சமுகமாவார்களென எதிர்பார்க்கின்றோம்.

Fr. J. A. Rajanayagam, O.M.I.
St. Francis Xavier's Church,
Nallur, Jaffna.

பத்தகமதிப்புரை

## இலங்கைத் தமிழ்விழா மலர்

ஆசிரியர் குழு:—

1. திரு. சு. நடேசபிள்ளை
2. திரு. செ. சின்னத்தம்பி
3. திரு. க. நவரத்தினம்
4. திரு. ச. அம்பிகைபாகன்
5. திரு. இராஜ அரியரத்தினம்

பதிப்பு—திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

விலை—பிரதிஒன்று ரூபா ஐந்து.

கிடைக்குமிடம்—க. நவரத்தினம், சாந்தி நிகேதன், பி. ஏ. தம்பிலேன், யாழ்ப்பாணம்.

தண்டமிழ்ஓசை எண்டிசையும் பரக்கவேண்டித் தொண்டர்பலர் ஆர்வத்துடன் எடுத்துக்கொண்ட அருமுயற்சிகளின்விளைவாக நான்மாடக்கூடல் நகராகிய மதுரையிலும், ஒருவாதபுகழுடைய திருவாதவூரிலும், கோயமுத்தூரிலும் முறையே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது தமிழ்விழாக்கள் பெருமிதமாகக் கொண்டாடப்பெற்றன. அடுத்த நான்காவது தமிழ்விழா சிதைவறியாத் தூயதமிழின் தனிநாடாகிய ஈழமண்டலத்திலே—ஈழத்தமிழர்பண்பாட்டின் தலைமைப்பதியாகிய யாழ்ப்பாணத்திலே கொண்டாடப்பெற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்று, இதுவும் சரித்திரப்பெருமைவாய்ந்ததொன்றாய் நடந்தேறலாயிற்று.

இந்தநான்காவது தமிழ்விழாவின் ஞாபகார்த்தமாக வெளிவந்திருப்பதே தமிழ்விழாமலர். இஃது இருநூறுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டதாய், வித்துவான்கள், பண்டிதர்கள், புலவர்கள், கலைமாணிகள் ஆதியோருட்படத் தமிழ்ப்போறிஞர் பலரால்எழுதப்பெற்ற தலைசிறந்த ஆராய்ச்சிக்கட்டுரைகள்பலவற்றைத் தன்னகத்தேகொண்டு மிளிர்கின்றது. இவ்வரிய கட்டுரைகளைப் படிப்பவர்கள் தமிழரின் பரந்துபட்ட நாகரிகம், பண்பாடு, சமயம், அரசியல், ஓவியக்கலை, சிற்பக்கலை ஆதியனபற்றிய ஒளவான அறிவைச் சலனபடக்காட்சியிற்போல் கண்டுகளிப்பரென்பதே நம்துணிபாகும். மேலும் இம்மலரின்கண் இடையிடையே பலதமிழ்ப்பெரியார்களின்படங்களும், வேறுபல காட்சிப்படங்களுமாக ஐம்பதுபடங்கள்வரையில் அடங்கியுள்ளன. இவைகள் இம்மலரை இனிதேவிளக்கிப் படிப்பவருக்கு விடயவிளக்கத்தையும் அளிக்கும்பெற்றிவாய்ந்து திகழ்கின்றன.

நான்காவதுதமிழ்விழாவின் ஞாபகமாக வெளிவந்துள்ள இம்மலரைத் தமிழ்மக்கள் அறியவேண்டிய முக்கியமானவிடயங்கள்பலவற்றை ஒன்றுசேர்த்து ஓர்நூலாகவும் அமைத்துதவிய தமிழ்விழாவின் நிருவாகசபையினர்க்குத் தமிழ்மக்கள் என்றென்றும் கடமைப்பாடுடையோராவர். அவர்களின் அயராமுயற்சியால் உருவாய இச்சிறந்தமலரைத் தமிழ்த்தாயின்மக்களனைவரும் வாங்கிப்படித்துப் பெரும்பயன்எய்தவேண்டுமென்பதே எமது பேரவாவாகும். நமக்கு அனுப்பிய ப்ரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## தயாளமும் சிநேகமும்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

களுக்கு மத்தியஸ்தரும், பரிந்துபேசுகிறவருமாயிருந்து தமது ஐந்து காயங்களையும் பிதாவிடம் காண்பித்து மன்றாடுகின்ற கிறீஸ்துநாதரின் இரக்கந்தானென்ன! நாம் யேசுவின் திருஇருதயத்தின் அன்பையும், தயாளத்தையும் நம்மாலான முறையில் பின்பற்ற முயற்சிப்போம். நமது அயலாரிடம் குற்றங்களைந்து, குணத்தைப்பாராட்டி, வன்சொல்அகற்றி, இன்சொல் கூறி, இரக்கங்காட்டி, இனியசெயலாற்றி, அன்புச்சேவைசெய்து ஆண்டவரின் பாதம் அனைவரையும் சேர்த்தலே அன்பும் தயாளமுமாம்.

### வருமானத்திலும் அதிகசெலவு

நமது அரசினருக்குச் சென்ற சித்திரை மாதத்தில் கிடைத்தவருமானத்தைக் காட்டிலும் செலவு 21 லட்சம் ரூபாவாலே அதிகரித்திருக்கிறது. அம்மாதத்தில் கிடைத்தவருமானம் 8 கோடியே 24 லட்சம் ரூபா. செலவு 8 கோடியே 45 லட்சம் ரூபா. ஆனால், நிகழும் அரசிறைவருடத்திலே சென்ற ஐப்பசிமுதல் சித்திரை ஈறாகவுள்ள ஏழுமாதங்களிலும் நமது அரசினருக்குக் கிடைத்தவருமானத்திலே செலவுக்குக்கண்டு 8 கோடியே 35 லட்சம் ரூபா மிஞ்சியிருக்கிறது. ஏழுமாதங்களிலும் கிடைத்தவருமானம் 47 கோடியே 85 லட்சம் ரூபா. செலவுத்தொகை 39 கோடியே 50 லட்சம் ரூபாவாகும்.

# அமெரிக்க செய்திகள்

### அமெரிக்க குடும்பப்பண்ணை

வாஷிங்ரன்

அமெரிக்கசுதந்திர குடும்பப்பண்ணைத் திட்டமானது "வேளாண்மைத் துறையில் சனநாயகம் தழைத்தோங்கக் கண்கண்ட அத்தாட்சியாக விளங்குகிறது. உலகிலே பிற்பட்டநாடுகளில் நிலச்சீர்திருத்தம் என்றபெயரில் கபஞ்செய்யும்குடிகளிடம் கம்யூனிஸ்தர்கள் பரப்பும்பசப்பலுக்குத் தக்க பதிலாக அமைந்துள்ளது" என்று சனாதிபதி ட்றூமனுக்குச் சமர்ப்பித்துள்ள ஆண்டறிக்கையில் அமெரிக்க விவசாயமந்திரியார் பிறனன் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார். 20 வருடக்கடன் சகாயத்தின்மூலம், அமெரிக்ககமக்காரர் நிலப்பாத்தியத்தைப் பெறுவதற்கும், நிலவளத்தைப் பெருக்குவதற்கும் உதவுகிறது இந்தத்திட்டம். குடும்பப்பண்ணைகளே அமெரிக்கதேசியசனநாயகத்தின் உயிர்நாடி என்பதைப் பூரணமாகஉணர்ந்து, அமெரிக்ககாங்கிரஸ் (சட்டசபை) அதற்கு ஊக்கமளித்துள்ளது. உழுகிறவனுக்கு நிலம்சொந்தம் என்றஉரிமையை அமெரிக்கா நிலைநாட்டியுள்ளதன்காரணம் இதிலுள்ள அருமைபெருமையை அறிந்தேயாகும். நில உடைமை பெருகப் பெருக உற்பத்தியும் பெருகிவருகிறது. நிலம் தனக்குச்சொந்தம்என்று அக்கறையுடன் குடியானவர்கள் பாடுபடுவதினால் கமத்தொழில் பெருஞ்சிறப்புப் பெற்றுள்ளதென்கிறார் திரு. பிறனன் மந்திரியார்.

### அடிமைத்தொழில் முகாம்கள்

பிறசெல்ஸ்

சோவியற்ருஷியா நடத்தும் அடிமைத்தொழிலாளரின் முகாம்கள் பற்றிய நவமான பயங்கரவிபரங்கள் இங்குள்ள சர்வதேசகம்மிஷன் நடத்தும் பகிரங்கவிசாரணையிலிருந்து வெளியாகின்றன. ஆனி 1-ந் திகதி உலகப் பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு இவ்விசாரணையின் தீர்ப்புச் சமர்ப்பிக்கப்படும். அடிமைத்தொழிலாளரின் முகாம்கள்குறித்துச் சோவியற்நாட்டில் பாரபட்சமற்ற விசாரணை நடத்த இக்கம்மிஷன் அனுமதிகோரியது. ஆனால், ருஷியா அனுமதிக்கமறுத்துவிடவே, இங்குவிசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்தவிசாரணை ஆரம்பமானபோது அதைக்கேட்கவந்த சனத்திரளின்எண்ணிக்கை மதிப்பிட முடியாது. விசாரணையைமுன்னின்று நடத்துகிறபிரமுகர் யாஜி கம்யூனிஸ்தரும், பிரபல பிரான்சியஎழுத்தாளருமான டேவிட் ரூஸே அவர்களே. சோவியற் அடிமைத்தொழிலாளரின் முகாம்களிலிருந்து தப்பிவந்துள்ளவர்கள் சாட்சியம் அளிக்கிறார்கள். பொலிஸ்கெடுபிடியிலே ருஷியமக்கள் மிருகத்தனமாக நடத்தப்படுகின்ற கொடுமையும், அடிமைகளாக வேலைசெய்துமடியும் நிலைமையும் இந்த விசாரணைகளிலே அம்பலமாகின்றன.

### சோவியற் ஏகபோகஅதிகாரம்

வாஷிங்ரன்

"அமெரிக்கஅரசு சமாதானத்திற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்க, சோவியற்அரசு ஏகபோகஅதிகாரம் பெறவும், கம்யூனிஸத்தைப் பரப்பவும் போராடுகிறது." இவ்வாறு அமெரிக்க இராணுவ தலைமைக்காரியாலய பிரதமதளபதியான பிராட்லி அவர்கள் செனற்சபைக் கூட்டுக்கமிற்றி விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"முதலாளித்துவமும், கம்யூனிஸமும் உலகிற்சேர்ந்து இயங்கமுடியாது என்று ருஷியா பலமுறைகளிலே பங்களாக ... போய்க்கொண்டிருக் அறிவித்திருக்கிறது. கடந்தபல வருடம் போக்கிலிருந்து ஆக்கிரமிப்பு, பயமுறுத்தல், பிரசாரம் முதலியவழிகளிலே தனது சுயஎதேச்சாதிகாரத்தைப் பரப்பவே ருஷியாமுனைந்திருப்பது தெளிவாகிறது. அதாவது சோவியற்அரசு தனதுஅரசியலை அதிகமான மக்கள்மீதும், அதிகமான நாடுகள் மீதும் பலாத்காரமாகச் சுமத்தமுயல்கிறது. இன்று அமெரிக்கா ஆக்கிரமிப்பையும், கம்யூனிஸத்தைப் பரப்புதலையும் எதிர்க்கும் சுதந்திர நாடுகளின் தலைமைப்பதவியை ஏற்றுள்ளது."

### சுரங்கக் கண்ணிகளுக்குப் பலி

நியூயோக்

கோறியாவிலே ஐக்கியநாடுகளின் போரணிகளுக்கு முன்புறமாகச் சுரங்கக்கண்ணிகள் (பூமியில் புதைத்து வைக்கப்பட்ட வெடிகுண்டுகள்) இடப்பட்டுள்ளன. மனிதர் அவற்றைத் தாண்டினால் அக்கண்ணிகள்வெடித்து உயிர்ச்சேதம் உண்டுபண்ணும். இந்தச் சுரங்கக்கண்ணிகளைக் கடக்கும்படி கோறியாவிலே இராணுவத்தொடர்பற்ற சாதாரணமக்களைக் கம்யூனிஸ்தஇராணுவத்தினர் துப்பாக்கியைக்காட்டி அச்சுறுத்திப் பலவந்தப்படுத்துகின்றனர். இப்படிப் பாமரசனங்கள் மாய்வதைத்தடுக்க, ஐ. நா. இராணுவஅதிகாரிகள் போதிய முன்னேற்பாடுகள் செய்கிறார்கள் என்று முன்சொன்ன தகவலை வெளியிடும் 'நியூயோக் ரைம்ஸ்' பத்திரிகை தனக்குக் கிடைத்த செய்தியறிக்கையில் கண்டிருக்கிறது. பொதுமக்கள் சுரங்கக்கண்ணிகளில்விழுந்து மடியாமலிருக்க, ஐ. நா. பாராக்காரர்கள் ஒத்தாசை செய்கிறார்கள். மறுவேளைகளிலே பொதுமக்களை எச்சரித்து, அபாய அறிவிப்புகள் (அடையாளங்கள் மூலம்) விடுக்கப்படுகின்றன. ஐ. நா. பாராக்காரர்கள் காப்பாற்றியவர்களுள் தலையிலே மூட்டைமுடிச்சுகளுடன் வந்த தாய்மாரும், மூன்று நான்கு பிராயக்குழந்தைகளும், கிழவர்களும் இருந்தார்கள்.

### பிற்பட்ட நாடுகளின் முதல் தேவை

வாஷிங்ரன்

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி ஆலோசனைக்கழகம் சனாதிபதி ட்றூமனிடம் நீண்டகாலத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறது. பிற்பட்டநாடுகளுக்கு உதவிபுரிவதிலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதையே முக்கிய குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்று அக்கழகம் தனது அறிக்கையில் சிபாரிசுசெய்திருக்கிறது. பொருளாதாரத்துறையில் வளப்படாத நிலையிலுள்ள பிரதேசங்களுக்கு அமெரிக்க ஐக்கியதேசம் எவ்வளவுஉதவி அளிக்கவேண்டியிருக்கும் என்பதை நிர்ணயமாகத் தெரிந்துகொள்ளவே இந்தக் கழகம் சனாதிபதியால் நியமிக்கப்பட்டது. வளப்படாதநாடுகளிலே வதிகின்ற 100 கோடிசனங்களில் பெரும்பான்மையோரை வாட்டிவதைக்கும் பசியையும், பிணியையும்தீர்க்குமாறு அந்நாடுகளிலே உணவுஉற்பத்தியைப் பெருக்கும்விஷயமாய் அமெரிக்கா உதவிசெய்ய வேண்டுமென்று அது கூறுகிறது. நாம் ஈடுபட்டிருக்கும் போராட்டத்திலே இதைக்காட்டிலும் பெரிதானகாரியம் வேறெதுவும் இருக்கமுடியாது. உணவுஉற்பத்திப் பெருக்கத்திற்கு உதவிசெய்யும் இயக்கமானது, பலாத்காரப்புரட்சிக்கு அடிவேரானதுன்பத்தையும், அதிருப்தியையும் அறவேஒழித்துவிடும். இது சுதந்திர - உணவு இயக்கம் என்றும் அழைக்கப்படும். வளப்படாதநாடுகளுக்கு உணவுஉற்பத்திவிஷயமாக உதவிசெய்வது உடனடியாகவும், நீண்டகாலத் திட்டமாகவும் மேற்கொள்ளப்படவேண்டியதாகும். (யூஸிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூர்

# அர்ச். அந்தோனியார் ஆலயத்தின் நூற்றுண்டு விழாக் கொண்டாட்டம்



**1951–ம் ஆண்டு ஆனிமாசம் 1—13.**

ஆனிமாசம் 1—11 மாலே 7 மணி:— செபமாலே, பிரசங்கம், வேஸ்பர் - சற்பிரசாத ஆசீர்வாதம்.

,, 12 மாலே 7 மணி:— செபமாலே, பிரசங்கம், மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவரவர்களால் வேஸ்பரும் - சற்பிரசாத ஆசீர்வாதமும்.

,, 13 காலே 5—6 மணி:— திவ்வியபூசைகள்.

,, 7 மணி:— மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவரவர்களால் பெரியபாடற்பூசை.

,, மாலே 4-30 மணி:— செபமாலே, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், ஆசீர்வாதம்.

கட்டளேக் குரவர்

பாஷையூர் — யாழ்ப்பாணம்

# ST. ANTHONY'S CHURCH,

**PASSAYOOR, JAFFNA.**

## CENTENARY CELEBRATIONS

June 1—11 : 7 p. m. Rosary, Sermon, Vespers, Benediction

June 12 : 7 p. m. Rosary, Sermon, Pontifical Vespers & Benediction by His Lordship the Bishop of Jaffna.

June 13 : 5 a. m. & 6 a. m. Low Masses
7 a. m. Pontifical High Mass by His Lordship the Bishop of Jaffna.
4-30 p. m. Rosary, Procession with the Statue of St. Anthony Benediction.

**Parish Priest,**
Passayoor, Jaffna.

## பரஸ்பர பந்தோபஸ்து

## அமெரிக்க சனதிபதியின் அறிக்கை

ஆடி 1-ந் திகதி தொடங்கும் அமெரிக்க நிதிவருடத்திற்குப் பரஸ்பர பந்தோபஸ்து ஏற்பாட்டைமுன்னிட்டுப் பிறநாடுகளுக்குப் பொருளாதார இராணுவஉதவிஅளிப்பதற்காக 850கோடிடலர் மான்யம்கோரிச் சனதிபதி ட்றூமன் அவர்கள் அமெரிக்ககாங்கிரஸுக்கு (சட்டசபை) விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு :

1952-ம் ஆண்டு ஆனி 30-ந் திகதியுடன்முடிவடையும் அமெரிக்கநிதிவருடத்திலே அமெரிக்கதற்காப்பு விருத்திக்காக 6,000 கோடிடலர் காங்கிரஸிடம்கேட்டு மூன்றுவாரங்களின்முன் அறிக்கைசெய்தேன். இப்போது பரஸ்பரபந்தோபஸ்து ஏற்பாட்டின் நிமித்தம் 1952-ம் ஆண்டு ஆனிமாதம் 30-ந் திகதியுடன்முடியும் நிதிவருடத்திற்குக் கீழ்க்காணும்சிபாரிசுகளேச் செய்கிறேன்.

1. ஏனேய சுதந்திரநாடுகளுக்கு 625 கோடிடலர் இராணுவசகாயம்.

2. ஏனேய சுதந்திர நாடுகளுக்கு 225 கோடிடலர் பொருளாதார சகாயம். இந்நாடுகள் தற்காப்புவிருத்திக்காக எடுக்கும் நடவடிக்கைகள் இதன் கீழ்சிறப்பாக ஆதரவுபெறும்.

நிகழும் நிதிவருடத்திலே இவ்வகையில் பொருளாதார சகாயமாக 300 கோடிடலரும், இராணுவசகாயமாக 530 கோடிடலரும் ஒதுக்கப்பட்டிருப்பதை முன்சொன்னதொகையுடன் ஒப்பிட்டுக்கொள்க. நமது சொந்த இராணுவபலப்பெருக்க ஏற்பாடும், இந்தப்பரஸ்பர பந்தோபஸ்து ஏற்பாடும் ஒன்றோடொன்று இணைந்தவைகள். ஒன்றுக்கு மற்றொன்று ஆதாரம்.

உலகில் மற்றெந்தநாட்டைக்காட்டிலும் அதிகமான பொருளாதார, இராணுவபலங்களே எமதுநாடு படைத்துள்ளது. ஆனால், நாம் தனித்துநிற்கவில்லே. தனித்துநிற்கவும் கூடாது. பிறஉலகம் பிளவுண்டு, சோவியற்அரசினல் அடிமைகொள்ளப்பட்டு நமக்கெதிராக அது திரட்டப்படுமாகில், நமதுநாகரீகத்தை நாம் நிலேநிறுத்த முடியாது. இது மிக உண்மையும், பயங்கரமுமான ஆபத்து. எனினும், இந்தஆபத்தைச் சமாளிக்கமுடியும். அதற்குநாம் ஏனேயசுதந்திர உலகநாடுகளுடன் ஒன்றுபட்டுச்செயலாற்ற வேண்டும். பொதுத் தற்காப்புத் திட்டங்களேத் தயார்செய்யவேண்டும். நமதுபொருளாதாரபலத்தை அவர்களதுபலத்துடன் இணைத்துப் பொதுநலனேக் குறியாகக்கொண்டு நடக்க வேண்டும்.

பரஸ்பரபந்தோபஸ்துத் திட்டத்தின் பிரகாரம், சுதந்திரநாடுகள் பலவற்றிற்குத் தாங்கிகளும், விமானங்களும், பீரங்கிகளும்கொடுத்துக் கம்யூனிஸ்த தாக்குதலின் அபாயத்தை எதிர்க்கப் பலந்திரட்டிவரும் அந்தநாடுகளுக்குத் துணைசெய்வோம். பசியையும், பிணியையும்போக்கி வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தப் பொருளாதார சகாயத்தைச் சுதந்திர நாடுகளுக்கு வழங்குவோம். அதனல் உள்நாட்டுப் பந்தோபஸ்துக்குத் தேவையான ஆயுதங்களேத் தயாரித்துக்கொள்வதற்கும், கமத்தொழில், கைத்தொழிலே விருத்திசெய்வதற்கும் வேண்டியசாதனங்களேயும், தொழில்நுட்பத்துணையையும் அமெரிக்காஅளிக்கும். இந்தப்பந்தோபஸ்து ஏற்பாட்டுத்திட்டம் சோவியற் அபாயத்தின் முக்கியமூன்று போக்குகளே மனதிலிருத்தி வகுக்கப்பட்டது.

1. சோவியற்அபாயம் உலகம்முழுவதையும் பீடித்திருக்கிறது. ஐரோப்பாவில் இந்தஅபாயம் இருக்கிறது. ஆசியாவில் இந்தஅபாயம் இருக்கிறது. ஏன்? நமது கோளார்த்தத்திலும் இருக்கிறது. சுதந்திரநாடுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகத்துண்டித்து, அவற்றின் ஆள், சாதனபலங்களேத் தனதுகைக்குள் போட்டுக்கொண்டு சுதந்திரஉலகிற்குஎதிராகக் கட்சிதிரட்டுவதிலே சோவியற் அரசு முனேந்திருக்கிறது. அதனுற்தான் உள்ளும்புறமும் கம்யூனிஸ்தஅபாயத்திற்கு இலக்காயிருக்கும் சுதந்திரநாடுகள்யாவற்றிற்கும் அத்தியாவசியகமான உதவியைச்செய்யப் பந்தோபஸ்துத்திட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது.

2. சோவியற்பயமுறுத்தல் பூரணமானது. அது அரைகுறைஅல்ல. கம்யூனிஸ்தர்கள் இராணுவத்தை அனுப்பித் தாக்குதலேநடத்தலாம். அல்லது உள்நாட்டுக்கலகத்தை வளர்த்துப் பொருளாதார பிணக்குகளேமூட்டிச் சிந்தனையைக்குழப்பி, அரசியலில் புகுந்து சதிசெய்து, இராணுவத்தை ஏவி — இப்படிக் காலத்திற்குத்தக்க ஆக்கிரமிப்புச்சூழ்ச்சிகளேத் தனிப்படவோ அல்லது ஒன்றுபடவோ சோவியற்ஆட்சியாளர் கையாளுகின்றனர். அதனுல் சுதந்திரஉலகத்தைச் சேர்ந்தநாடுகள் தங்கள் இராணுவபலத்தையும், அத்துடன் பொருளாதாரபலத்தையும், அரசியல்பலத்தையும், ஆன்மபலத்தையும் அதிகரித்துக் கொள்ளவேண்டும். அதற்காகவே பந்தோபஸ்துத்திட்டத்தில் இராணுவ, பொருளாதார ஒத்தாசைகள் இரண்டும் அடங்கியுள்ளன.

3. சோவியற்பயமுறுத்தல் எவ்வளவுகாலம் இருக்குமென்பது சொல்வதற்கில்லே. திடீரெனச் சோவியற் ஆட்சியாளர் ஆயுத ஆக்கிரமிப்பில் இறங்கவும்செய்யலாம். அல்லது பலவருடகாலம் முழுச்சண்டையில்மட்டும் இறங்காமல் ஆக்கிரமிப்புச்சூழ்ச்சிகளேத் தொடர்ந்து செய்தும்வரலாம். இரண்டையும்யோசித்தே நாம் காரியம்செய்யவேண்டும். அதனுற்றான் உடனடியாகத் தற்காப்பைப்பலப்படுத்துவதுடன் தற்காப்புப் படைகளேயும் நீண்டகாலம் கட்டிக்காக்கவும் ஆயத்தஞ்செய்யவேண்டும். பந்தோபஸ்து ஏற்பாட்டில், பொருளாதார உதவி சேர்க்கப்பட்டிருப்பதன் காரணம், சோவியற் சர்வாதிகாரத்தின் திட்டத்தைமுறியடிக்கவே. சோவியற் குழப்படிக்கு இடங்கொடாமல் சுதந்திரஉலகம் தனதுபொருளாதார உறுதிப்பாட்டை வளர்த்துக்கொண்டேயிருக்கவேண்டும். சோவியற்அரசை முந்திக்கொண்டு பொருளாதார, இராணுவவலிமையை நாம் உறுதியாக்கிவிடவேண்டும்.

சுதந்திரநாடுகளிடம், சோவியற் அபாயத்தைக் களேயக்கூடிய மனத்திண்மையும், சாதனபலமும் இருக்கின்றன. உலக கைத்தொழில்உற்பத்தியில் நூற்றுக்கு 75 வீதம் சுதந்திர நாடுகளுடையது. மூலப்பொருட்கள் அநேகமாகயாவும் சுதந்திர நாடுகளிடமேஉள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகக் கம்யூனிஸ்தஆக்கிரமிப்பை நிறுத்திச் சாந்தி நிலேபெறச்செய்வதில், உலகெங்கணுமுள்ள சுதந்திரமக்கள் உறுதிகொண்டுள்ளார்கள். உலக சமாதானமே நமதுகுறிக்கோள். ஒரேயொருவித யுத்தத்தையே— வறுமை, நோய், பசி, அறியாமைஆகிய விரோதிகளேஎதிர்த்து நடத்தும்யுத்தத்தையே நாம்நாடுகிறோம்.

ஆசியாவிலே பந்தோபஸ்துக்கும், சமாதானத்திற்குமாக நடக்கும் போராட்டம், இராணுவவிஷயத்தைக் காட்டிலும் அதிமுக்கியமானது. இராணுவசகாயம் தேவைப்படுகிற நாடுகள் உட்பட ஆசியநாடுகள்பலவும் பொருளாதாரசகாயம் நாடுகின்றன. ஆசிய மக்கள் பொருளாதாரமேம்பாட்டிற்காகத் தங்களாலானதைச் செய்துவருகிறார்கள். இவ்வகையில் ஊக்கமளிக்கிறஏற்பாடு கொழும்புத்திட்டமாகும். ஐ. நா. மூலம் ஆசியாவுக்கு ஓரளவு உதவி (தொழில்நுட்பஉதவி) கிடைக்கவிருக்கிறது. இந்த உதவி மட்டும் போதாது. அமெரிக்கஉதவியும் அவசியப்படுகிறது.

4-வது அம்சத் திட்டப்பிரகாரம், ஆசியநாடுகள்சிலவற்றிலே இப்போது கணிசமான அளவு தொழில் நுட்ப உதவியும், யந்திரசாதன உதவியும் நமதுபொருளாதார ஒத்துழைப்பு நிர்வாகத்தால் அளிக்கப்பட்டுவருகிறது. இந்தவேலே தொடர்ந்துநடக்க, நான் இப்போது சிபாரிசுசெய்கிற திட்டத்திலிருந்து நிதிகிடைக்கும். பின்தங்கிய நாடுகளிலே சுகாதாரம், விவசாயம், போக்குவரத்து, மூலவளவிருத்திஆகியவற்றிற்காக நமது திட்டம் செயல்படுத்தப்பெறும். இந்தநாடுகளிலே மூலவளங்கள் குவிந்து கிடக்கின்றன. சீரானமுறையில் அவற்றைப்பெருக்கிச் சுதந்திரஉலகிற்கு அவைகள் சமமாகக் கொடுக்கப்படுவது மிகமுக்கியமாகும். இப்போதையஏற்பாட்டில் இதற்கு வழி சொல்லப்பட்டிருக்கிறது.

பரஸ்பர பந்தோபஸ்துஏற்பாட்டினுல், சோவியற்அரசின் ஆக்கிரமிப்புக் கொள்கை மாறிவிடுமா? என்று கேட்கக்கூடும். எப்போது? எவ்விதம்? அது தனது ஆக்கிரமிப்புக்கொள்கையைக் கைவிடும்என்று இப்போது சொல்லமுடியாது. ஆனல், ஒன்று மட்டும் நிச்சயம். அடிமைப்படுத்தியும், பலவந்தப்படுத்தியும், பயங்காட்டியும் ஆள்வதுஎன்பது நெடுநாள் நடவாது. சுதந்திரதாகத்துடன் முன்னேற்றத்துடிப்புள்ள சனசமூகத்தின் சக்திக்குமுன் சோவியற்திட்டம் பொடியாவதுதிண்ணம்.

அமெரிக்கா ஆறு ஆண்டுகளுக்கு முன் என்னநினேத்தது? மகாயுத்தம் முடிந்த அச்சமயத்திலே நாம் என்ன நினேத்தோம்? சண்டைசச்சரவுஎன்பது இனிஇல்லாமலேபோய் நம்மிடமுள்ள சக்தி, புத்தியைக்கொண்டு உலகோருடன்ஒத்துழைத்து எல்லாரும் வாழ்வின்வசதிகளேப் பூரணமாய்ப் பெற்றிருக்கச்செய்யக் காலம்வந்தது என்று நம்பினேம். அந்த நம்பிக்கையை நாம் ஒருக்காலும் கைவிடக்கூடாது. எங்கும், எல்லாருக்கும் சுபீட்சம், சுயேச்சை என்ற நமது கொள்கை, நமதுநம்பிக்கை நிறைவேறத் தளராதுமுயற்சிப்போமாக.

—அமெரிக்கஐக்கியதேச பிரதம இராணுவஅதிகாரிகளின் தலேவரான ஜெனறல்பிறாட்லி அவர்கள் வாஷிங்ரன் நகரிலே ஜெனறல் மைக்ஆர்தரின் பதவிநீக்கம்பற்றிய விசாரணையில் சாட்சியம் அளித்தபோது, ருஷியாவுடன் பெரியயுத்தம்ஒன்றில் இறங்குவதற்கு அமெரிக்கவரசு இன்னுமே ஆயத்தமாய்இல்லேயெனத் தெரிவித்திருக்கின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலாபத்துறை
## அர்ச். பிரான்சீஸ் சவேரியார் திருநாள்

வழமைப்பிரகாரம் இவ்வருடமும் ஆனிமாதம் 19-ந் திகதி சிலாபத்துறையில் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் அர்ச். சவேரியாரின் திருநாள் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படும். சிந்துதேச அப்போஸ்தலரின் தாசர்கள் அனைவோரும் வந்து அவருடைய சலுகையை இரந்து மன்றாடித் திருநாளைப் பத்தியருட்சிக்குரியவிதமாய்க் கொண்டாடிச் சிறப்பித்தேகுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

| | | |
|---|---|---|
| ஆனிமாதம் | 9-ந் திகதி | கொடியேற்றம் |
| ,, | 18-ந் ,, | மாலை ஆராதனையும் (வேஸ்பரும்) |
| ,, | 19-ந் ,, | திருநாட் பாடற்பூசையும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும். |

கவனிப்பு:—

சுற்றுப்பிரகாரமுடிவில் யாத்திரிகட்குக் கோவில் விருந்து அளிக்கப்படும். அதில் பங்குபெற விரும்பும் அனைவோரும் கட்டளைச்சுவாமியாரிடம் நேர்த்திக்குரிய உணவுப் பொருட்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கட்டளைச்சுவாமியார்

## பிள்ளைகளுக்கு என்ன செலவு?

அன்றொருநாள் என்மருமகன் அருமையைக் கூப்பிட்டு, அந்தநாற்சந்திக் கடைக்குப்போய் "ஒரு பைக்கெற் சிகறெற் வாங்கிவா" என்று சொல்லி ஒரு ரூபா நோட்டை எடுத்துக்கொடுத்தேன். "கவிகட்டா, பீக்கொக்கா?" என்றான். "திறிறோசஸ்... மூன்று றோசாப்பூக்கள் இருக்கிற பைக்கெற்" என்றேன். அவன் சற்றுத் தயங்கினான். முதல் ரூபா நோட்டைப் பார்த்தான். பிறகு என்னைப் பார்த்தான். அவனுடைய பார்வையில் கேள்விக்குறி...... அல்ல, கெஞ்சும்பாவனையேயிருந்தது. "நீயும் சொக்கிளேற் வாங்கு" என்று சொன்னதும் பறந்தோடிப்போய்விட்டான்.

என்சகோதரி என்னை விறைத்துப் பார்த்துவிட்டுச் "சும்மா பெடியனைப் பழுதாக்கலாமா? வீட்டிலே தான் பிஸ்கோத்திருக்கிறதே" என்றாள்.

ஆயினும் பிள்ளைகள் பணம்செலவழிக்க, காசுடன்புழங்க விரும்புவதையும், ஏதோ ஒருநாளிலே அவர்களுக்குக் காசு கொடுத்தே தீரவேண்டும் என்பதையும் பெற்றோர் உணர்ந்தேயாகவேண்டும். பிள்ளைகளுக்குக் காசு தேவைப்படுகிறது என்பதைப் பெற்றோராகிய நீங்களெல்லோரும் உணர்ந்தேயாக வேண்டும்.

இதற்குப் போம் புத்தியென்ன? அவர்கள் ஒரு செம்புச்சல்லியையும் தொடவிடாமல் நீங்கள் காசுப்பெட்டியைப்பூட்டிச் சுமந்துகொண்டுதிரிவதா? அல்லது அவர்கள் கேட்கிற நேரம் கொடுக்கிறதா? அல்லது தாங்கள் செலவழிக்க விரும்பும் பணத்தை அவர்களைக்கொண்டு உழைக்கப்பண்ணுகிறதா" அல்லது இந்தா இவ்வளவும் உன்செலவுக்கு" என்று சொற்ப தொகையைக் கொடுப்பதா?

சில பெற்றோர் பிள்ளைகளுடைய சிறுசெலவிற்குச் சிறுதொகையேனும் கொடாமல் விடுவார்கள். இப்படிப்பட்ட பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் காலகதியில் களவுத்தொழிலில் நிபுணராகச் செய்துவிடுகிறார்கள். அந்தப் பிள்ளைகள் மிட்டாய்வாங்குவதற்கு நேர்மையாய்க்கேட்டுக் கிடையாத காசைக் களவெடுப்பார்கள். அவர்களுக்கேயென்று பெற்றோர் செய்துவைக்கும் தின்பண்டங்களையும் களவெடுப்பார்கள். பெற்றோர் விசாரிக்குமிடத்தில் அறம்புறமாகப் பொய்யுஞ் சொல்லிவிடுவார்கள். இந்தப்பழக்கம் உறுதிகொண்டு பிற்காலம் அவர்களை நேர்மை, யோக்கியம், நிதார்த்தமற்றவர்களாக்கி விடுகிறது. சிலவேளைகளிலே தாங்கள் வகித்திருக்கும் உத்தியோகத்தையும் அவர்கள் இழக்கச் செய்ததை நாம் கண்ணூறக்கண்டிருக்கிறோம்.

ஆராய்வாகப்பார்க்கும்பொழுது ஒரு குறித்த தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிடுவது உசிதம்போலிருக்கிறது. ஏனெனில், சிக்கனவாழ்விற்கும், வருவாய்க்குத்தக்க செலவுசெய்யப் பயிற்றுவதற்கும், பொருளைமதிக்கும் தன்மையைக் கற்றுக்கொள்வதற்கும், உத்தரவாத மனப்பான்மையை உண்டாக்குவதற்கும் சிறுவரின்செலவுக்கென்று குறித்த ஒரு தொகையைக் கொடுத்தலே தகுதியாகும்.

"தம்பிப்பிள்ளை ஏதும் செலவுசெய்ய விரும்பினால், அந்தக்காசை உழைக்கட்டும்" என்பர் சிலபெற்றோர். வயது வந்த வாலிபப்பிள்ளைகள் தாங்கள் செலவழிக்கவிரும்பும் பணத்தை அப்படி உழைக்கச்செய்வது நல்லதுதான். ஆனால், பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் உழைக்கவழியுண்டா? வசதியுண்டா? வசதியிருந்தாலும் நேரமுண்டா?

பிள்ளைகளுடையசெலவுக்குப் பணங்கொடுக்க எங்களுடைய வரும்படி போதியதல்ல" என்பீர்களாக்கும். உங்களுடையவாராந்த, மாதாந்த, வருடாந்த செலவுக்கு மேலாகப் பிள்ளைகளின் செலவுக்குக் கொடுக்கவேண்டுமென்பதில்லை. பெற்றோருடைய வருடாந்த செலவுத்திட்டத்தில் பிள்ளைகளுக்குச் செலவழிப்பதெனக் குறித்து வைத்திருக்கும் பணத்தில் முழுத்தொகையையோ, அன்றேல் ஒருபாகத்தையோ அவர்களே செலவுசெய்யவிடுவதே வேண்டற்பாலது. திட்டமில்லாவிடினும் நீங்கள் செலவழிப்பதில் ஒருபாகத்தை அவர்களே செலவழிக்கட்டும்.

"நான் சிறுவனயிருந்தபோது செலவுக்கு ஒருவர்தரவுமில்லை; நான் செலவுசெய்யவுமில்லை," என்பார் அடுத்தவீட்டு அப்புத்துரை. அதெல்லாம் அந்தக்காலம் ஐயா! காசுக்கஷ்டமான காலம்; ஒரு பணத்திற்கு ஒரு நேரச்சோறு தின்றகாலம்; நாங்கள் இருக்கிறது இந்தக்காலம்; பணம் அதிகமாக உள்ளகாலம்; பஞ்சப்படி கொடுபடுகிறகாலம் (பணம் அதிகமானாலும் பொருள் கிடைப்பது அரிது என்பதைப்பற்றி நாம் பேசவில்லை.) பிள்ளைகளுக்குப்பணம் அநேகசந்தர்ப்பங்களிற் தேவைப்படுகிறகாலம்.

"இந்தக்குழந்தைகள் கையிற் காசைக் கொடுத்தால் அவர்கள் அதை வீணில் விரயஞ்செய்வார்கள்" என்பாள் ஒரு தாய். மெய்தான் அம்மா, அப்படித்தான் அவர்கள் வீண்செலவு செய்யாமலிருக்கவும் பழகிக்கொள்வார்கள். உங்களுக்கு அதிகநட்டம் வராமுடியாத சந்தர்ப்பங்களில் பிழைகளைச் செய்து கற்றுக்கொள்ளட்டும். சில பெற்றோர் குறைகூறியபோதிலும், பிள்ளை செலவுசெய்ய ஒருசிறு தொகைப்பணத்தை அவர்கள் கையில் ஒப்படைப்பது உசிதமென உணருகிறார்கள்; உணர்ந்து பணத்தை ஒப்படைக்கத் தீர்மானித்துவிட்டார்களென்று வைத்துக்கொள்ளுவோம். பொடியனுக்கு என்னதொகை கொடுப்பதென்பதும், எப்பொழுது கொடுக்கத் தொடங்குவதென்பதும் இனி எழும் பிரச்சினைகளாகும்.

(தொடரும்)

### தமிழ் விழா

## கலைக்காட்சி

[ தமிழ் விழாவில் தென்னிந்திய ஈழசிற்பம், சித்திரம் முதலிய கலைச் சின்னங்களைக்கொண்ட கலைக்காட்சியை, சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் திறந்துவைத்தபோழுது நிகழ்த்திய சொற்பொழிவின் ஞாபகம் ]

சென்னைத் தமிழ்வளர்ச்சிக் கழகச் சார்பில்நடைபெறும் நான்காவது தமிழ்விழா ஈழநாட்டில் நடைபெறுவது எங்கள் யாவர்க்கும் பெருமகிழ்ச்சியைத் தருவதொன்றாகும். இவ்விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் பலபாகங்களிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் தமிழறிஞர்கள் பெருந்திரளாக இங்கே சமுகமளித்திருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விழாவின் ஓர்பகுதியாக அமைந்துள்ள கலைக்காட்சியினைத் திறந்துவைக்கும்படி வரவேற்புக்கழக அங்கத்தவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டனர். அவர்கள் இட்டபணியை நிறைவேற்றுவதோடு தமிழ்விழா நிகழ்ச்சிகளை அனுபவிக்கும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்துள்ளது. இதற்காக வரவேற்புக்கழகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றியைச்செலுத்தவிரும்புகின்றேன்.

ஒரு நாட்டின் உண்மை இயல்பினையும், அதன் பண்பாட்டின் தன்மையையும் அறியவேண்டுமாயின் அந்நாட்டின் கலைகளை யாம் உற்றுநோக்குதல் வேண்டும். தமிழ்மன்னர்களும், தமிழ்மக்களும் நற்கலைகளைப் பேணிவளர்த்தனர். சேர சோழ பாண்டிய மன்னர்களும் நம் ஈழநாட்டு அரசர்களும் கலைவளர்ச்சியில் ஈடுபட்டனர். எனவே அக்காலத்தில் சிற்பம், சித்திரம், இசை, நடனம் முதலியகலைகள் உச்சநிலையை அடைந்தன. தென்னிலங்கையிலும் கலை வளர்ச்சிக்குத் தமிழர் ஆற்றிய பெருந்தொண்டு சரித்திர ஆராய்ச்சி முறையால் அறியக்கிடக்கின்றது. பின்னர் தமிழ்நாடு அந்நியர்ஆட்சிக்கு உட்பட்டகாலத்தில் இவைகள் ஓரளவு குன்றத்தலைப்பட்டன. எனினும் மீண்டும் யாம் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டமையால், தமிழ்நாட்டில் கலைகள் மறுபடியும் அபிவிருத்தியடைந்து வருகின்றன என்பதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

கலையென்பது மக்கள் வாழ்க்கைக்குப் புறம்பானதொன்றாகத் தமிழ்மக்கள் கருதவில்லை. இதனாற்றான் இக்கலைகள் இன்றும் உயிரோடிருக்கின்றன. வீட்டிற் சமையல் செய்வதற்கு வேண்டிய சட்டி, பானை முதலிய மட்கலன்களை ஆதாரமாகக் கொண்டு எவ்வளவு அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்களையெல்லாம் தமிழ்மக்கள் செய்து காட்டினர். பின்னர் மரம், கல்லு, கொம்பு, தந்தம், உலோகம் முதலியவற்றின் உதவிகொண்டு சிற்பம், சித்திரம முதலியகலைகளை அபிவிருத்திசெய்து வந்தனர். தமிழ்நாட்டு இசைக்கருவிகளை உருவாக்குதலே ஒரு மாபெரும் தனிக்கலையாகவிளங்குகிறது.

கலையின் உணர்ச்சி மனிதசமுக வாழ்க்கைப்படியின் ஒவ்வொரு காரியாம்சத்திலும் பிரதிபலிப்பதே சிறந்த நாகரிகத்தின் அறிகுறியாகும். மக்கள் உபயோகிக்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் கலையின் விசித்திரத்தை அதிவிமரிசையாகக் கைக்கொண்டவர்கள் தமிழரே. சுருங்கக்கூறின் வீட்டு முற்றங்களிலே வெவ்வேறு விதமான அழகியகோலங்களை நம்பெண்மணிகள் சித்திரிக்கும் பழக்கமொன்றே மெச்சத்தக்கசான்று. நாள்தோறும் உபயோகிக்கும் பொருள்களில் தமிழர்கள் தம் கைத்திறனைக் காட்டினர். குத்துவிளக்குகள் என்றால் எத்தனைவகை? பாவை விளக்குகள் என்றால் எத்தனை வகை? குடங்கள் எத்தனைவகை? வெற்றிலைத் தட்டங்கள், பாக்குவெட்டிகள், உட்காரும் பீடங்கள், புத்தகம் வைக்கும் சிக்குப்பலகைகள் இவையெல்லாவற்றிலும் அழகிய பதுமைகளைச் செதுக்கியும், சித்திரங்களை வரைந்தும், பலபல நிறங்களைக் கண்குளிரச்சேர்த்தும் உபயோகித்துவந்தனர்.

நமது பெண்மணிகளது ஆடைஆபரணங்களின் விதம்விதமான வர்ணசித்திர அலங்காரங்கள் வேறுசாதியாரால் மெச்சிஅனுசரிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.......

தமிழரின் வாழ்வுப்பெருமையானது திறமையானவற்றையெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணம் பண்ணுவதாயே இருந்தது. அதோடு இசைக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, மருத்துவக்கலை முதலிய எல்லாக்கலைகளும் ஆன்மஞானத்தை வற்புறுத்தும் கருவிகளாயின. இம்மாபெருங் கலைகளில் கடவுளைக்கண்டார்கள் எனவே கோயில் அமைப்பிலும், வழிபாட்டிலும் இக்கலைகள் பயன்படுத்தப்பட்டன. அழகிய கோயில்களையும், கோபுரங்களையும், விமானங்களையும், சித்திரம் நிறைந்த மண்டபங்களையும் அழகுற அமைத்தனர். இசையும் நடனமும் கோயில் வழிபாட்டு உறுப்புக்களாகப் பய்ன்பட்டுவந்தன.......ஒரு காலத்தில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் தமிழர்பெரும்பான்மையாய்ப் பௌத்த மதத்தினராக இருந்தார்கள். அப்போது தமிழரின் கலாசக்தியும், பண்பாடும் பௌத்த மதத்திற்காகவே பயன்படுத்தப்பட்டன. ஆகவே தமிழ்த்தாயை ஆர்வத்தோடு வழிபடுபவர் சாதி சமயப்போரில் ஈடுபடுதல்தவறு. அப்படியே தமிழ்த்தாய்க்குரிய கலைகளும் பொதுப்பாவனைக்குடையன......

நம் நாட்டுக் கலைகளை வளர்ப்பதில் நாம் அக்கறை கொள்வோமாக. நம் நாட்டின் கலைகள் மீண்டும் புத்துயிர் பெற்று எழுதலினாலேதான் சுதந்திர உண்மை வெளிப்படையாகும். தற்போது திறக்கப்போகின்ற காட்சிகளைப் போன்றவை எங்கள் உள்ளத்தின் உல்லாசஉணர்ச்சியினைப் பிரதிபலித்துக் காட்டக்கூடியவை. இக்காட்சியில் இயன்றஅளவு "தமிழருடையன" என்னும் தனிச்சிறப்புத் தன்மையான பொருட்களையே சேகரித்து ஒழுங்கு செய்திருக்கின்றார்கள். பலகாட்சிப் பொருள்கள் கோவில் சம்பந்தமாக இருப்பதும் இயற்கையே.

தமிழ்நாட்டின் பண்பாட்டை விளக்கும் கலைக்காட்சியினை மிகமகிழ்ச்சியுடன் திறந்துவைக்கிறேன். இதனை வெறுமகாட்சியாகக் கருதாது, தமிழர் கலைத்திறனை உண்மையாக உணரும் சாதனமாகக்கொண்டு தமிழ்க்கலைக்குப் புத்துயிரளிப்பதில் நாங்கள் கரிசனை கொள்வதற்கு வாய்ந்த அரியசந்தர்ப்பமாகக் கருதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ்த்தாய் வாழ்க! தமிழ்க் கலைச்செல்வங்கள் ஓங்கிவளர்க!

பெரிய குறிப்பிடம்

விற்பனைக்குத் தயாராயிருக்கிறது.

பிரதி விலை சதம் 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் ஆண்டாக நிகழும் கோறிய யுத்தம்

கோறியயுத்தத்திலே ஐக்கியநாடுகளுக்குச் சமீபத்தில் இராணுவவெற்றி கிடைத்துள்ளபோதிலும் ஓராண்டு காலமாக நடைபெற்றுவரும் இந்த இழுபறியுத்தத்திலே அரசியல் விவேகம் வெற்றிபெற்றாலன்றி ஐக்கியநாடுகளின்லட்சியம் கைகூடுவது நிச்சயமல்ல. ஓர்குறிக்கோளின்றி எதிரிகளைத் துரத்திச்செல்ல முயற்சிப்பது புத்திசாலித்தனமல்ல. ஐக்கியநாடுகளின் பிரதமதளபதியான அமெரிக்க தளபதி தமதுசைனியங்களை ஒரு குறித்தஎல்லைவரை முன்னேறச்செய்து அங்கு உறுதியாகநிற்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும். இம்மாதிரியான ஓர்குறிக்கோளைப் பின்பற்ற ஜெனறல் மைக்ஆர்தருக்குக் கட்டளையிடப்படவில்லையென்பது இப்பொழுது நடைபெறும் விசாரணையிலிருந்து தெரியவருகிறது. ஆகவே, இப்பொழுதாவது அவ்விதமான ஓர் குறிக்கோளைப் பின்பற்ற ஜெனறல் றிட்ஜ்வேக்குக் கட்டளைபிறப்பிப்பது மிகஅவசியமாகும். இப்படிச்செய்வதால், அமெரிக்கபடைகளைக் கோறியாவுக்குஅப்பால் துரத்தவேண்டுமென்றஎண்ணம் ஈடேறாது தத்தளிக்கும் மோசிதுங் தனதுமானத்தைக் காத்துக்கொள்வதற்காகச் சமரசப்பேச்சுக்கு இணங்க முன்வரக்கூடும். கோறியாவிஷயமாய்ப் பொதுவாக ஐக்கியநாடுகளின் லட்சியமும், அமெரிக்காவின்லட்சியமும் ஒன்றேயாகும். யுத்தத்தைநிறுத்தவேண்டும், அந்நியபடைகளைக் கோறியாவிலிருந்து பின்வலித்துக்கொள்ளவேண்டும், பின்னர் ஐக்கியகோறியாவைச் சிருஷ்டிக்க வாக்கெடுப்பு நடத்தவேண்டும், இறுதியாகப் போர்மோசா பற்றியும், மற்றுமுள்ள தூரகிழக்குப் பிரச்சினைகள்பற்றியும் சீனாவுடன் மகாநாடுகூடிப்பேசி ஒருமுடிவுக்கு வரவேண்டுமென்பதே அந்த லட்சியமாகும். சீனாவோ ஐக்கியநாடுகளின சபையில் தனக்கு ஓர்ஸ்தானம் அளிக்கப்பட வேண்டும். போர்மோசாவிலிருந்து அமெரிக்கபடைகள் வெளியேறவேண்டும். இந்தஇருநிபந்தனைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டாலன்றி வேறுவிஷயங்களைப்பற்றி ஆலோசிக்கத் தன்னால் முன்வரமுடியாதென்று பிடிவாதம்செய்கிறது.

ஆனல், அமெரிக்காவோ, ஆக்கிரமிப்புநடவடிக்கையில் சீனா இறங்கியபடியால் அதற்குத் தக்கபாடம் படிப்பிக்கவேண்டும், அதன்மேல்தான் ஐக்கியநாடுகளின்சபையில் அதைச்சேர்த்துக்கொள்வதைக்குறித்து யோசிக்கவேண்டுமென்று கருதுகிறது. போர்மோசாவைச் சீனாவிடம்ஒப்புவிப்பது சம்பந்தமாக அமெரிக்காகொண்டுள்ள மனப்பான்மை வரவரக் கடுமையாகிக்கொண்டே வருகிறது. இவ்விதமான அபிப்பிராயபேதங்கள் கோறிய யுத்தநிறுத்தப் பிரச்சினைக்குத் தடையாகக் கொண்டுவந்து நிறுத்தப்படலாகாது. பல்லாயிரமக்கள் இந்தஇழுபறியுத்தத்தில் மடிவதைவிட எவ்விதத்திலும் யுத்தத்தைநிறுத்த அரசியல் விவேகம் உறுதுணையாகவேண்டும்.

தூரகிழக்கிலே கோறியயுத்தத்தில் தோய்ந்து நசுங்கிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே கம்யூனிஸ்தஆக்கம் தெற்குநோக்கி வாலாட்டிவருகிறது. இந்தோசீனாவில் உள்நாட்டு யுத்தம் நின்றபாடில்லை. மலாயாவிலும், இந்தோசீனாவிலும் கம்யூனிஸ்த நடவடிக்கைகளைக் கூட்டாக எதிர்த்து ஒழிப்பதற்குச் சிங்கப்பூரில் மூன்று நாடுகளின் தூரகிழக்குத் தளபதிகள் ஓர் திட்டத்தை உருவாக்க, பர்மாவிலுள்ள கம்யூனிஸ்தகலகக்காரருக்குச் சீனா ஊக்கமளித்துவருவதாகவும், தேசிய சீனப்படைகள் பர்மாவுள் புகுந்து பதுங்கியிருப்பதாகச் சொல்லிக்கொண்டு கம்யூனிஸ்த சீனப்படைகள் வடபர்மாவில நடமாடுவதாகவும் சொல்லப்படுகிறது. அதனல் பர்மாவிலுள்ள கம்யூனிஸ்தர்களுக்கு உதவியளிக்கும்வகையில் கம்யூனிஸ்தசீனா பர்மாவில் தலையிடுமோ எனறஅச்சமும் இருந்துவருகிறது.

பர்மாவை யடுத்துள்ளதும், அசாம் நாட்டிலிருப்பதுமான நாகர்கள்வாழும் பிரதேசத்திலும் கம்யூனிஸ்தர்களின் நடமாட்டம் இருந்துவருகிறது. இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புறத்திலுள்ள இப்பிரதேசத்தில் கம்யூனிஸ்த நடவடிக்கைகளை ஒடுக்க இந்திய அரசாங்கம் முயற்சியெடுத்துவருகிறது. "நாகஸ்தான்" என தங்களுக்குத் தனிப்பட்டதோர் இராச்சியத்தை அமைக்கவேண்டுமென நாகர்கள் கிளர்ச்சிசெய்கின்றனர். இக்கிளர்ச்சி கம்யூனிஸ்தரால் தூண்டப்பட்டதாகும். மேலும் இந்தியாவின் வடக்குஎல்லையிலுள்ள திபேத்தும் சமீபத்தில் பீக்கிங்நகரில் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் கம்யூனிஸ்தசீனாவின் ஆதிக்கத்திற் குட்பட்டதாக ஆகிவிட்டது. ஆகவே, இந்தியாவின்வடக்கிலும், வட[illegible] [illegible]லும் கம்யூனிஸ்[illegible] கிறது.

## மாதோட்டத் தபால்
(நாட்டுத்தூதன்)

ஐயா! நாட்டின்முன்னேற்ற விஷயங்களில் ஈடுபட்டு உழைத்துவந்தோர் பலர் இப்போது தங்களைக் காட்டிக்கொள்ளாது மவுனமாகவும், மறைமுகமாகவும்சீவிக்கத் தொடங்கிவிட்டனராம். ஆமாம், ஆமையைப்போன்று அடக்கமாக வாழ்க்கைநடாத்துவது ஆயிரம்பொன் பெறுந்தானும். ஆனல் இவர்கள் அப்படியெல்லாம் தூரவிலகி நடப்பது தன்னடக்கம் பற்றியல்லவாம். பின்னை? இங்கேநாட்டாண்மை செலுத்திவராநின்ற தனிப்பெருந்தலைவர்கள்சிலரின் தந்திரபோக்கும், பாரபட்சமான நீதியுந்தான் காரணமென்று கதைத்துக்கொள்ளுகின்றனராம். இந்தஅவதந்திரிகள் நாட்டைவிட்டு எப்போது நடைகட்டுவரோ அப்போதுதான் நாடுசுபீட்சமடைந்து நன்றாக வாழுமென நம்பியிருக்கலாம்.

**சிறுபோகமா? சீரழிவா?**—சில ஆண்டுகளுக்குமுன் வருடந்தோறும் சிறுபோகவேளாண்மை தவறாதுசெய்யப்பட்டுவந்தது. ஆனல், தற்போது வர்ணபகவானின் திருவிளையாடலால் இருவருடங்களுக்கு ஒருமுறையே அது நடைபெறக்கூடியதாய் இருக்கிறதாம். இதனையும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ஏழைஉழவர்கள் குட்டிவிவசாய உத்தியோகஸ்தர் சிலரால் இம்சிக்கப்படுவதை நினைக்குந்தோறும் நெஞ்சம்நெக்குவிட்டு உருகுகின்றதாம். உள்ளவனுக்குத்தான் இன்னுங் கொடுக்கப்படுகிறதாம். இல்லாதவனிடமிருந்தோ உள்ளதும்எடுக்கப்படுகிறதாம். அம்மம்ம! சுமார் பத்துப்பதினைந்துமைல் தூரமான இடங்களிலிருந்துதானும் பெருந்தொகையான ஏழைஉழவர்கள் சிறுபோகஞ்செய்யப்படும்இடங்களை நாடிப்போகவேண்டியிருக்கிறதாம். இவர்கள் தங்கள் பெண்டீர்பிள்ளைகளையும், வீடுவாசல்களையும், தனிக்கவிட்டு, இல்லைஇல்லை, தவிக்கவிட்டு, அரிசிப்பொட்டணங்களுடனும், கமத்தொழிலுக்குரிய ஆயுதங்களுடனும் கூட்டங்கூட்டமாகச் செல்லும் உருக்கமான காட்சியைக் காணுந்தோறும் உள்ளூர உணரும்போதும் பெரியபரிதாபமாய் இருக்கிறதாம், இவ்வாறுசெல்லுகிறவர்கள் இம்சைக்குள்ளாகும்போது எத்தகையமனமடிவு உண்டாகுமென எடுத்துக்கூறவும் வேண்டுமா? ஈழமாதேவி சுதந்திரம்அடைந்தும் ஏழைகள்ஈடேற வழிகாணாதிருப்பது மிகவும்விசனத்திற்குரியதே. அதனல் தாங்கள் செய்வது சிறுபோகம்அல்ல, பெருஞ்சீர்கெட்ட போகமேயென்று அவர்கள்கூறிக் கவலைப்படுவது ஆச்சரியமன்று.

**கிராமச்சங்கங்கள்** — இப்பகுதியிலுள்ள கிராமச்சங்கங்களெல்லாம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல்கள் நடைபெறலாயின. இதுகாரணமாகச் சிலகிராமங்களின் வட்டாரங்களிலே பெருங்கிளர்ச்சிகள்எழலாயின. இங்கு முடிசூடா மன்னரெனத் தம்மைமக் கருதி இறுமாப்பாகநடந்த ஒருசிலர் இம்முறை குட்டிக்கரணம் அடித்துக்கொண்டு விழுகையடைந்தனராம். அகந்தைஎப்போதும்அழிவுக்கேடென்பதில் சந்தேகமில்லையாம். சிலகிராமவாசிகள் வாக்குரிமைவழங்கும் விஷயமாய் நாட்டுப்பற்றற்றவர்கள் போல் காட்டிவிட்டமை வருந்தத்தக்கதாம். அக்கிராசனர்கள்தேர்தலிலும் இனி ஆர்ப்பாட்டங்கள் நடந்தேதீருமாம். இத்தகைய அட்டகாசமெல்லாம் தத்தம் சுயமரியாதையை நோக்கியல்லாது சுயநாட்டுத் தொண்டுபற்றியேயென்று சொல்லமுடியாதாம்.

**கைலஞ்சம்**—லங்காமாது சுதந்திரம் அடைந்தபின்என்றாலும் கைலஞ்சமென்னும் சஞ்சலந்தரும் கொள்ளைநோய் அமர்ந்துவிடுமென்றுதான் ஏழைமக்கள் எண்ணியிருந்தார்களாம. ஆனல், அவர்கள் நினைத்ததெல்லாம் இலவுகாத்தகிளியின்பாடாகவே இருக்கிறதாம். சிறுபோகவேளாண்மைக் காலங்களிற்தான் இந்தநோய் இங்கே தலைவிரித்துச் சன்னதமாடுகிறதாம். மேலதிகாரிகள் இதனைஅடக்க என்ன தான்நடவடிக்கை எடுத்தபோதிலும் அது சுழியோடிக்கொண்டுதான் இருக்கிறதாம். இந்தநோய் எப்போது அகலுமோ அப்போதேஏழைகள் சமாதானமாக வாழமுடியுமாம். சுபம்!


கீர்த்தி வாய்ந்த

கிறவுண் முடி அடையாளம் பதித்த மார்க் ஓடுகளையே

**பாவியுங்கள்!**



இவ் ஓடுகளை அழைப்பித்து விற்பவர்:

**மிசெஸ் இம்மனுவேல் திருச்செல்வம்**

அவர்கள் மாத்திரமே.

இன்னும் ஓட்டுக்கலவையிலே தயாரிக்கப்பட்ட இந்தியன் செங்கற்களும், தளவரிசைக் கற்களும் விற்பனைக்குண்டு.

[முன்போல் வியாபாரம் நடந்துவருகிறது.]

விலாசம்: பேரியதெரு, யாழ்ப்பாணம்.
தந்தி: திருச்செல்வம், போன் நம்பர்: 52.


## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். சூசையப்பருடைய உதவியை எல்லாரும், எவ்விஷயத்திலும், எப்போதும் தேடுங்கள். ஒருவிவாகம் நிறைவேறுகிறதற்கு எல்லாவிதமான இடையூறுகளும் மலைபோல் எழும்பித் தடைசெய்து அழிந்துபோகும்போற் தோன்றியது. இச்சமயத்தில் அநாதைகளின் தகப்பனான அர்ச். சூசையப்பரை அண்டிப்போய் மன்றாடினேன். ஒருவருடம் விடாப்பிடியாய் மன்றாடினதின்பயனாக விரும்பியபடி தேவநேசமுள்ள, விசேஷமாய் அர்ச். சூசையப்பர்மேல் பக்திநம்பிக்கையாயிருக்கும் ஒருகுடும்பத்தில் அவ்விவாகம் நிறைவேறியது. அர்ச். சூசையப்பரின்நாமம் என்றும்புகழப்படுவதாக.

பேசாலைவாசி

## எஸ். எஸ். சி. தராதரப்பத்திரம்

அரசாங்க பரீட்சைகளிலே சித்திபடைந்த மாணவர்களுக்குக் கொடுபட்டுவரும் தராதரப்பத்திரங்கள் கைதவறிப்போனதாக அல்லது களவுபோனதாக அறிவிக்கப்படும்போது, அவற்றிற்குப்பதிலாக இனிமேல் வேறு தராதரப்பத்திரங்கள் கொடுப்பதில்லையென்று கல்விப்பகுதி முடிவுசெய்திருக்கிறது. பரீட்சைகளில் தவறியவர்கள் திருட்டுத்தனமாகத் தராதரப்பத்திரங்கள் தேடிக்கொள்ள முயற்சிப்பதையிட்டே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விசேஷமாய் எஸ். எஸ். சி. தராதரப்பத்திரம் சம்பந்தமாகவே இந்தத் திருவிளையாடல் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது.

## வெங்காயத்தின் சத்துக்கள்

போர்த்துக்கேயர்களால் இந்தியாவுக்குக்கொண்டுவந்து பயிரிடப்பட்ட உணவுப்பொருட்களுள் வெங்காயமும் ஒன்று. இது நல்ல அவுஷதமென்று தொன்றுதொட்டுத்தானே கீர்த்திபடைந்திருக்கிறது. ஆனல், இதில் தேகத்திற்குப் போஷணை அளிக்கக்கூடிய சத்துக்களும் இருக்கின்றன என்பதை அறிந்திருப்பவர்கள் வெகு சொற்பபேர்களே. வெங்காயத்தில் சுணைபம் (Calcium) ஏராளமாக இருக்கிறது. முக்கால்றாத்தல் வெங்காயம் நமக்குத் தினமும் வேண்டிய சுணையம்அனைத்தையும தரக்கூடியது. வெங்காயத்தில் கந்தகமும், மங்கனமும் (Manganess) சுமாரான அளவிலே இருக்கின்றன. இவையன்றி இதிலிருந்து ஒருவகையானகதிர்கள் வெளியாகின்றன. இவைகளுக்கு ய[illegible] கதிர்கள்என்றுபெயர். இவைகள் சூரியனின் ஊதாப்புற (ultraviolet) கதிர்களைப்போன்றவைகள். ஆனல், பச்சைவெங்காயத்தில் மட்டுந்தான் இக்கதிர்கள் இருக்கின்றன. வெங்காயத்தை வேகவைக்கும்போது இவைகள் சிதைந்துபோகின்றன. உஷ்ணதேசங்களிலே பெல்லக்ரா என்னும் ஒருவிதசருமவியாதி வருவதுண்டு. இது பார்வைக்குக் குஷ்டம்போலவிருக்கும். இது ஆகாரத்திலே விற்றமின் ஜி சத்துக் குறைவாகவிருப்பதால் உண்டாகிறது. வெங்காயத்தில் விற்றமின் ஜி இருக்கிறது. நாம் இதைத் தாராளமாகச் சேர்த்துவந்தால் பெல்லக்ராவியாதி வராமல் தடுக்கலாம். வெங்காயத்தை நாம்உபயோகிக்க வெகுநேரத்திற்குமுன் அரிந்துவைப்பது நல்லதல்ல. மிகப்பொடிப்பொடியாக அரிதலும் நல்லதல்ல.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 7 1951.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org